# ராஜ்யம், உடன்படிக்கைகள் & பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு

பாடம் 3

## தெய்வீக உடன்படிக்கைகள்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு   பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

ராஜ்யமும் உடன்படிக்கைகளும் ........ 2

- தொல்லியல் கண்டுபிடிப்புகள் ........ 3
- வேதாகம நுண்ணறிவுகள் ........ 7

உடன்படிக்கைகளின் வரலாறு ........ 11

- உலகளாவிய உடன்படிக்கைகள் ........ 12
  - ஆதாம் ........ 13
  - நோவா ........ 14
- தேசிய உடன்படிக்கைகள் ........ 16
  - ஆபிரகாம் ........ 16
  - மோசே ........ 18
  - தாவீது ........ 20
- புது உடன்படிக்கை ........ 22

உடன்படிக்கைகளின் இயக்கவியல் ........ 24

- உலகளாவிய உடன்படிக்கைகள் ........ 26
  - ஆதாம் ........ 27
  - நோவா ........ 28
- தேசிய உடன்படிக்கைகள் ........ 30
  - ஆபிரகாம் ........ 31
  - மோசே ........ 33
  - தாவீது ........ 35
- புது உடன்படிக்கை ........ 36

உடன்படிக்கைகளின் மக்கள் ........ 41

- மனிதகுலத்தின் பிரிவுகள் ........ 42
  - உடன்படிக்கைகளுக்குள்ளானவர்கள் ........ 42
  - சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் விலக்கப்பட்டவர்கள் ........ 45
- இயக்கவியலின் பயன்பாடு ........ 46
  - அவிசுவாசிகள் விலக்கப்படுதல் ........ 47
  - அவிசுவாசிகள் உட்படுத்தப்படுதல் ........ 48
  - விசுவாசிகள் சேர்க்கப்படுதல் ........ 50

முடிவுரை ........ 53




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

நீங்கள் பண்டைய உலகில் ஒரு பெரிய ராஜாவாக இருந்து மற்ற நாடுகள் மீது உங்கள் ஆட்சியை பரப்ப உறுதியுடன் இருந்தால், நீங்கள் எப்படி உங்கள் ராஜ்யத்தை நிர்வகிக்க வேண்டும்? உங்கள் சாம்ராஜ்யம் பெரிதாக வளர்ந்து வரும் நிலையில், அதன் அடிப்படைக் கொள்கைகளை நீங்கள் எவ்வாறு ஸ்தாபிப்பீர்கள்? பழைய ஏற்பாட்டைப் படிக்கும்போது நாம் கேட்க வேண்டிய நல்ல கேள்விகள் இவை, ஏனென்றால் பழைய ஏற்பாடு தேவனை உன்னதமான ராஜாவாக முன்வைக்கிறது, அவர் பூமியின் எல்லைகளுக்கு தனது ராஜ்யத்தைப் பரப்புவதில் உறுதியாக இருக்கிறார். தங்கள் காலத்தில் இருந்த பெரிய ராஜாக்கள் சர்வதேச ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகள் மூலம் தங்களின் விரிவடைந்த ராஜ்யங்களை ஆண்டனர் என்பதை பண்டைய இஸ்ரவேலர்கள் அறிந்திருந்தார்கள். எனவே, தேவன் தம்முடைய விரிவடைந்த ராஜ்யத்தை உடன்படிக்கைகளின் மூலமும் நிர்வகித்தார் என்பதை அறிந்துகொண்டதில் அவர்களுக்கு ஆச்சரியமில்லை. அவருடைய ராஜ்யம் பூமியெங்கும் பரவியிருந்தபோது, அதை நிர்வகிக்கும் அடிப்படைக் கொள்கைகளை தேவனுடைய உடன்படிக்கைகள் ஸ்தாபித்தன.

இது *ராஜ்யம், உடன்படிக்கைகள் & பழைய ஏற்பாட்டின் நூற்தொகுப்பு* என்கிற நம் தொடரின் மூன்றாவது பாடமாகும். நாம் அதற்கு "தெய்வீக உடன்படிக்கைகள்" என்று தலைப்பிட்டுள்ளோம். இந்தப் பாடத்தில், உலகெங்கிலும் தம்முடைய ராஜ்யத்தை முன்னேற்றுவதற்காக தேவன் எப்படி தொடர்ச்சியான உடன்படிக்கைகளின் மூலம் தம்முடைய ராஜ்யத்தை ஆட்சி செய்தார் என்பதை நாம் ஆராய்வோம்.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பில் உள்ள புத்தகங்கள் தேவனுடைய மக்களை பல்வேறு காலங்களிலும் சூழ்நிலைகளிலும் சுட்டிக்காட்டுவதற்காக எழுதப்பட்டன. இருப்பினும், ஒவ்வொரு புத்தகத்தின் கண்ணோட்டமும் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனைவரும் பொதுவாக வைத்திருந்த நம்பிக்கைகளின் தொகுப்பின் அடிப்படையில் இருந்தன. பரலோகத்திலிருந்து பூமியின் எல்லைகள் வரை அவருடைய ராஜ்யத்தை விரிவுபடுத்துவதே வரலாற்றில் தேவனுடைய மகத்தான நோக்கம் என்று அவர்கள் அனைவரும் நம்பினார்கள். முக்கிய தொடர் உடன்படிக்கைகள் மூலம் தேவன் வெவ்வேறு காலங்களில் அவரது ராஜ்ய விரிவாக்கத்தை நிர்வகித்தார் என்று அவர்கள் நம்பினார்கள். உண்மையில், பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுடைய உடன்படிக்கைக் கொள்கைகளை வெவ்வேறு சூழ்நிலைகளின் சவால்களுக்குப் பிரயோகிப்பதன் மூலம் தேவனுடைய ராஜ்யத்தை மேம்படுத்த

தங்கள் புத்தகங்களை எழுதினார்கள். இந்த காரணத்திற்காக, தேவனுடைய உடன்படிக்கைகளைப் புரிந்துகொள்வது பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பகுதியின் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்வதற்கு முக்கியமானது.

பழைய ஏற்பாட்டில் தெய்வீக உடன்படிக்கைகளைப் பற்றிய நமது ஆய்வு நான்கு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலாவதாக, தேவனுடைய ராஜ்யத்துக்கும் அவருடைய உடன்படிக்கைகளுக்கும் இடையிலான முக்கியமான தொடர்புகளை நாம் ஆராய்வோம். இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய உடன்படிக்கைகளின் வரலாற்றைப் பார்ப்போம். மூன்றாவதாக, இந்த உடன்படிக்கைகளில் வாழ்க்கையின் இயக்கவியலை நாம் ஆராய்வோம். நான்காவதாக, தேவனுடைய உடன்படிக்கைகளின் ஜனங்களை நாம் ஆராய்வோம். முதலாவதாக, தேவனுடைய ராஜ்யத்துக்கும் அவருடைய உடன்படிக்கைகளுக்கும் இடையிலான முக்கியமான தொடர்புகளை நாம் ஆராய்வோம்.

# ராஜ்யமும் உடன்படிக்கைகளும்

இஸ்ரவேலரின் விசுவாசத்திற்கு உடன்படிக்கை என்ற கருத்து முக்கியமானது என்பதை பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்த ஒவ்வொருவரும் அறிவார்கள். *பெரித் என்கிற* எபிரெய வார்த்தை பொதுவாக "உடன்படிக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 280 க்கும் மேற்பட்ட முறை இது தோன்றுகிறது. உடன்படிக்கையின் இந்த கருத்தாக்கம் பெரும்பாலும் மற்ற சொற்களுடனும் தொடர்புடையது. பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கைகளின் முக்கியத்துவம் மறுக்க முடியாதது. ஆனால் வருத்தப்படும் விதமாக, வேதாகமத்தில் தேவனுடைய உடன்படிக்கைகளின் அடிப்படை அம்சங்களை பலர் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். தேவனுடைய உடன்படிக்கைகள் தெய்வீக ராஜாவாக அவருடைய ஆட்சியோடும், பூமியில் அவருடைய ராஜ்யத்தின் வளர்ச்சியோடும் பிரிக்கவியலாதபடி எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் பார்க்கத் தவறுகிறார்கள். அப்படியானால், தெய்வீக உடன்படிக்கைகள் தேவனுடைய ராஜ்யத்துடன் எவ்வாறு தொடர்புபடுத்தப்பட்டன? பழைய ஏற்பாட்டின் இந்த இரண்டு முக்கியமான போதனைகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?

தேவனுடைய ராஜ்ய நோக்கங்களுக்கும் அவருடைய உடன்படிக்கைகளுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வதற்கு, நாம் இரண்டு திசைகளில் பார்ப்போம். முதலாவதாக, இந்த இணைப்புகளைப் புரிந்துகொள்வதற்கான மதிப்புமிக்க பின்னணிகளை வழங்கும் சில சமீபத்திய தொல்பொருள் கண்டுபிடிப்புகளை நாம் குறிப்பிடுவோம். இரண்டாவதாக, இந்த கண்டுபிடிப்புகள் தெய்வீக உடன்படிக்கைகளின் வேதாகம கருத்தாக்கத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குறிப்பிடத்தக்க நுண்ணறிவுகளை எவ்வாறு வழங்குகின்றன என்பதை நாம் காண்போம். நமது விஷயத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் சில சமீபத்திய தொல்பொருள் கண்டுபிடிப்புகளுடன் தொடங்குவோம்.

## தொல்லியல் கண்டுபிடிப்புகள்

பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை அருளினார் என்றும், அவை எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் தேவனுடைய வார்த்தையாக இருக்கின்றன என்றும் கிறிஸ்துவின் சீஷர்கள் சரியாக உறுதிப்படுத்துகிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் பூர்வ இஸ்ரவேலர்களுக்காக இந்த வேதாகமத்தை முதலில் அருளினார் என்பதை நினைவில் கொள்வது எப்போதும் முக்கியம். பூர்வ இஸ்ரவேலர்களின் கலாச்சார அனுபவங்கள், அவர்கள் தங்கள் நாளில் தேவனுடைய வெளிப்பாட்டைப் புரிந்துகொள்வதற்கான மேடையை அமைத்தன. கடந்த நூற்றாண்டின் பிற்பாதியில் மேற்கொள்ளப்பட்ட பல தொல்லியல் கண்டுபிடிப்புகள், தேவனுடைய உடன்படிக்கைகளுக்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் இடையில் அடிப்படைத் தொடர்புகள் இருந்தன என்பதை உண்மையுள்ள இஸ்ரவேலர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்கள் என்பதை அறிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன என்பதை நாம் சீக்கிரத்தில் பார்க்கப் போகிறோம்.

பண்டைய கிழக்கு தேசங்களிலிருந்து கிடைத்த மூன்று வகையான அரச ஆவணங்கள் பெரும்பாலும் வேதாகம உடன்படிக்கைகளின் விவாதங்களில் தோன்றுகின்றன: முதலாவதாக, ராஜ சமநிலை ஒப்பந்தங்கள் - ஒப்பீட்டளவில் சம அந்தஸ்துடைய ராஜாக்கள் ஒருவருக்கொருவர் தங்கள் உறவுகளின் விதிமுறைகளை பேச்சுவார்த்தை நடத்தி உடன்படிக்கைகள் செய்துகொள்ளுதல்; இரண்டாவதாக, ராஜ மானியங்கள் - பண்டைய ராஜாக்கள் தங்கள் உண்மையுள்ள ஊழியர்களுக்கு நிலங்களை அல்லது சிறப்பு அந்தஸ்தை எவ்வாறு முறையாக வழங்கினார்கள் என்பதை வெளிப்படுத்தும் எழுத்துக்கள்; மூன்றாவதாக, மேலாதிக்க ராஜா -சிற்றரசர் உடன்படிக்கைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பிற ஆவணங்கள் - பெரிய ராஜாக்கள் சிறிய, அடிபணிந்த ராஜாக்கள் மற்றும் அவர்களின் தேசங்களுடன் நிறுவிய சர்வதேச ஒப்பந்தங்கள்.

உண்மையில், அரச சமநிலை உடன்படிக்கைகளிலிருந்து வேதாகமத்தில் தெய்வீக உடன்படிக்கைகளைப் பற்றிய ஒரு சில நுண்ணறிவுகளை மட்டுமே நாம் பெற முடியும். சம அந்தஸ்தில் உள்ள மனிதர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் உடன்படிக்கைகளின் விதிமுறைகளைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர் என்பதை பழைய ஏற்பாடு குறிக்கிறது என்பது நிச்சயம். ஆனால், தெய்வீக உடன்படிக்கைகளைப் பொறுத்தவரை, தேவன் ஒருபோதும் மனிதர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை, ஏனென்றால் எந்த மனிதனும் அவருக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சமமாக இல்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர் தனது உடன்படிக்கைகளின் எல்லா விதிமுறைகளையும் சர்வாதிகாரத்துடன் கட்டளையிட்டார்.

இதற்கு அப்பால், வேதாகம அறிஞர்கள் வேதாகமத்தில் தேவனுடைய உடன்படிக்கைகளுக்கும் அரச மானியங்களுக்கும் இடையே சில குறிப்பிடத்தக்க ஒப்புமைகளை சுட்டிக்காட்டியுள்ளனர். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை இஸ்ரவேல் சுதந்தரிப்பதையும், தாவீதின் வீட்டை இஸ்ரவேலின் ராஜ வம்சமாக தேவன் தேர்ந்தெடுத்ததையும் மையமாகக் கொண்ட தொடர்புகளை அவர்கள் குறிப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த இணைகள் பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன என்பதை நாம் பின்னர் பார்க்கவிருக்கிறோம்.

இதுவரை, வேதாகம தெய்வீக உடன்படிக்கைகள் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்திய பண்டைய அரச ஆவணங்களில் பெரும்பாலானவை மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கைகளாகும். தேவனுடைய ராஜ்யத்திற்கும் அவருடைய உடன்படிக்கைகளுக்கும் இடையிலான உறவை வேதாகம எழுத்தாளர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்கள் என்பதைப் பற்றிய கணிசமான நுண்ணறிவுகளை இந்தப் பண்டைய எழுத்துக்கள் வழங்குகின்றன.

பழைய ஏற்பாட்டு உலகில், எகிப்தின் பார்வோன்களும், ஏத்தியர், பாபிலோனியர்கள், அசீரியர்கள் மற்றும் இஸ்ரவேலின் ராஜாக்களும் கூட பலவீனமான ராஜ்யங்களை வெற்றிகொள்வதன் மூலமோ அல்லது இணைப்பதன் மூலமோ தங்கள் பிரதேசங்களை விரிவுபடுத்தினர். அவர்கள் இதைச் செய்தபோது, ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகள் மூலம் தங்கள் விரிவடையும் ராஜ்யங்களின் அஸ்திபாரக் கொள்கைகளை நிறுவினர். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த சர்வதேச ஒப்பந்தங்கள் பலவற்றைக் கண்டுபிடித்து அவற்றை ”மேலாதிக்க ராஜா-சிற்றரசு ஒப்பந்தங்கள்” என்று குறிப்பிட்டுள்ளனர்.

இப்போது, ”மேலாதிக்க ராஜா” மற்றும் ”சிற்றரசர்” என்ற சொற்களால் நீங்கள் குழம்ப வேண்டாம். ”மேலாதிக்க ராஜா” என்பது வெறுமனே ஒரு பேரரசர் அல்லது ஒரு பெரிய ராஜாவைக் குறிக்கிறது. நிச்சயமாக, ”சிற்றரசன்” என்பதற்கு வேலைக்காரன் என்று பொருள், அல்லது ”பெரிய ராஜாவின் வேலைக்காரன்” என்று அர்த்தம். பெரிய அரசர்கள் - மேலாதிக்க ராஜாக்கள் - மற்றும் சிறிய அரசர்கள் - சிற்றரசர்கள் - மற்றும் அவர்களின் தேசங்களுக்கு இடையிலான தொடர்புகளை நிர்வகிக்கும் அடிப்படைக் கொள்கைகளை மேலாதிக்க ராஜா-சிற்றரசர் ஒப்பந்தங்கள் நிறுவின. எனவே, ஒரு மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கை என்பது ஒரு பெரிய பேரரசருக்கும் ஒரு சிறிய அரசருக்கும் அவரது தேசத்திற்கும் இடையே செய்யப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.

> பண்டைய அண்மைக் கிழக்கு சூழலில் அரசாட்சியானது … உடன்படிக்கை என்ற கருத்தாக்கத்தில் பெரும்பாலும் அடித்தளமாக இருந்தது. எனவே, ஒப்பந்தங்கள், பண்டைய ஒப்பந்தங்கள் பற்றிய சான்றுகள் நம்மிடம் உள்ளன, அதில் ஒரு ராஜா, அல்லது ஒரு ஆதிக்க பிரபு, அல்லது ஒரு ”மேலாதிக்க ராஜா” அடிப்படையில் சில மக்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதை இது குறிக்கிறது. ஆகையால் அவர்கள் இந்த மேலாதிக்க ராஜாக்களுக்கு ஊழியம் செய்கிறவார்களாக மாறுவார்கள். மேலும் அவை உறவை வரையறுக்கின்றன. மேலாதிக்க ராஜா, மேலாதிக்க பிரபு, ஒரு உறவைப் பராமரிக்கக்கூடிய சொற்களின் தொகுப்பை வரையறுக்கின்றன. அவர் இப்படி ஏதாவது சொல்வார்: ”நான் உங்களுக்கு பாதுகாப்பை வழங்குவேன், நான் உங்களுக்கு செழிப்பை கொடுப்பேன், உங்கள் பயிர்களில் ஒரு பகுதியை என்னிடம் பகிர்வதாலும், உங்கள் விசுவாசத்தை எனக்குக் காட்டுவதாலும், மற்ற அரசர்களுடனோ அல்லது மேலதிகாரிகளுடனோ கூட்டணிகளை உருவாக்காததாலும் அதற்கு ஈடாக என் அடையாளத்தை உங்களுக்கு வழங்குவேன்.” எனவே இது ஒரு அர்த்தத்தில் பார்க்கும்போது ஒரு பரஸ்பர வகையான சூழ்நிலையாக இருந்தது. இந்த வகையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் ராஜ்யம் மற்றும் உடன்படிக்கையின் தன்மை பற்றி சிந்திக்கத் தொடங்கினால், பழைய ஏற்பாட்டின் பல்வேறு பகுதிகள் இந்த மேலாதிக்க ராஜா ஒப்பந்தங்களின் சரியான கூறுகளுடன் மிகத் துல்லியமாக ஒத்துப்போகின்றன என்பதை நாம் காணலாம்.
>
> – Dr. – Mr. பிராட்லி டி. ஜான்சன்

மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கைகள் பொதுவாக ஏழு முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தன. அவைகள் பெரிய ராஜாவை அடையாளம் காட்டும் ஒரு முன்னுரையுடன் தொடங்கின. இந்த முன்னுரையைத் தொடர்ந்து ஒரு வரலாற்று முன்னுரை இருந்தது, அது மேலாதிக்க ராஜா சிற்றரசர்களுக்கு செய்த கனிவான செயல்களை மையமாகக் கொண்டிருந்தது. அடுத்து, இந்த உடன்படிக்கைகள், சிறிய அரசர்கள் தங்கள் மேலாதிக்க அரசர்களுக்கு கீழ்ப்படிய வேண்டிய குறிப்பிட்ட நிபந்தனைகள் அல்லது சட்டங்களை வழங்கின. இந்த விதிகளைப் பின்பற்றி, வழக்கமாக இந்த உடன்படிக்கைகளின் வருடாந்திர பொது வாசிப்புகள் மற்றும் புதுப்பித்தல்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன, மேலும் அனைத்து கடமைகளும் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்ய தெய்வங்களுக்கு அழைப்பு விடுத்த தெய்வீக சாட்சிகளின் பட்டியல்களும் இருந்தன. இந்த உடன்படிக்கைகள் பின்னர் கீழ்ப்படிதலுக்கான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வாதங்களாகவும், கீழ்ப்படியாமைக்கான சாபங்களாகவும் மாறின. இந்த சர்வதேச உறவுகளை முறைப்படுத்துகின்ற ஒரு சம்பிரதாயமான, பலியாக செலுத்தப்படும் உணவு முடிவில் வழக்கமாக இருந்தது.

பழைய ஏற்பாட்டில் இந்த ஏழு உறுப்புகளுக்கும் தெய்வீக உடன்படிக்கைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க ஒப்புமைகள் உள்ளன. ஆனால் இந்த கூறுகள் ஒவ்வொன்றையும் தொடுவதற்குப் பதிலாக, வேதாகம உடன்படிக்கைகள் இந்த ஒப்பந்தங்களின் அடிப்படை இயக்கவியலுக்கு இணையாக இருந்த வழிகளை நாம் முன்னிலைப்படுத்துவோம்.

மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கைகளின் ஏழு பொதுவான கூறுகள், பெரும் அரசர்களுக்கும் அவர்களின் சிற்றரசர்களுக்கும் இடையிலான பரஸ்பர தொடர்புகளை வகைப்படுத்தும் ஒரு அடிப்படையான, மூன்று மடங்கு மாறும் தன்மையை வெளிப்படுத்தின. முதலாவதாக, ஒப்பந்தங்கள் ராஜ கருணையை வலியுறுத்தின - அதாவது பெரிய அரசர்கள் தங்கள் சிற்றரசர்களிடம் காட்டிய கருணையை இது குறித்தது. முன்னுரையில், அரசன் தன்னைச் சரியான ஆட்சியாளனாக அடையாளப்படுத்திக் கொள்வான். பின்னர் வரலாற்று முன்னுரையானது பெரிய ராஜா தனது சிற்றரசர்களிடம் கருணை காட்டிய குறிப்பிட்ட வழிகளை விவரிக்கும். ராஜ கருணையின் கருப்பொருள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது, பெரிய அரசர்கள் தங்களை ”தந்தை” என்றும் தங்கள் சிற்றரசர்களை ”குமாரர்கள்” என்றும் அடிக்கடி அழைத்துக் கொண்டனர்.

மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கைகளின் இரண்டாவது முக்கிய கவனம் சிற்றரசர்கள் பெரிய அரசர்களுக்கு விசுவாசமாய் இருக்க வேண்டியதைப் பற்றியது. சிற்றரசர்கள் ராஜாவின் சட்டங்களைக் கடைப்பிடித்து, விலைமதிப்பற்ற உலோகங்கள், ஆபரணங்கள், அடிமைகள், சிப்பாய்கள் மற்றும் அவர்களின் அறுவடையின் சில பகுதிகளைக் கப்பமாக கட்ட வேண்டும். தாங்கள் தங்கள் பெரிய அரசர்களுக்கு நன்றியுள்ள, விசுவாசமான ஊழியர்கள் என்பதை சிற்றரசர்கள் நிரூபிக்கும் வகையில் இந்த நிபந்தனைகள் விவரிக்கப்பட்டன.

மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கைகளின் மூன்றாவது முக்கிய கவனம் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகள் மீது இருந்தது. பெரிய ராஜாக்கள் தங்கள் ராஜ்ய நோக்கங்களுக்காக சேவை செய்யும் வழிகளில் ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் அனுபவிப்பதற்கான தங்கள் ராஜ உரிமையை எப்போதும் தனியாக ஒதுக்கி வைத்திருந்தனர். ஆனால் மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கைகளில், அரசர்கள் தங்கள் விசுவாசமான சிற்றரசர்களுக்கு வரும் ஆசீர்வாதங்களைப் பிரகடனப்படுத்தி, விசுவாசமற்ற சிற்றரசர்களுக்கு வரும் சாபங்களைப் பற்றி எச்சரித்தனர்.

மேலாதிக்க ராஜா-சிற்றரசர் உடன்படிக்கைகளின் இந்த மூன்று மைய அம்சங்கள், வேதாகமத்தில் தேவனுக்கும் அவருடைய உடன்படிக்கை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மக்களுக்கும் இடையிலான உறவின் அடிப்படை இயக்கவியலை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன என்பதைப் பார்ப்போம்.

இந்த தொல்பொருள் கண்டுபிடிப்புகளை மனதில் கொண்டு, தேவனுடைய ராஜ்யத்திற்கும் அவருடைய உடன்படிக்கைகளுக்கும் இடையிலான முக்கிய இணைப்புகளைப் பற்றி அவைகள் நமக்குக் கொடுக்கும் வேதாகம நுண்ணறிவுகளுக்கு நாம் திரும்ப வேண்டும்.

## வேதாகம நுண்ணறிவுகள்

பழைய ஏற்பாடு நண்பர்களுக்கிடையே, வாழ்க்கைத் துணைவர்களுக்கிடையே, அரசியல் தலைவர்களுக்கிடையே, பழங்குடியினர்களுக்கிடையே மற்றும் பிற நாடுகளுக்கு இடையிலான உறவுகள் போன்ற பலவிதமான உறவுகளை உடன்படிக்கைகளாக விவரிக்கிறது என்பதை நாம் ஆரம்பத்தில் இருந்தே குறிப்பிட வேண்டும். இந்த மனித தொடர்புகள் பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கைகள் என்று அழைக்கப்பட்டன, ஏனெனில் அவை முறைப்படி பரஸ்பர கடமைகளுடன் மக்களை ஒருவரோடுவர் பிணைத்தன. சில சமயங்களில், பழைய ஏற்பாடு இந்த மாறுபட்ட உடன்படிக்கை உறவுகளை தேவனுடைய மக்களுடனான உறவோடு ஒப்பிடுகிறது. எனவே, பழைய ஏற்பாட்டில் உள்ள பல்வேறு வகையான உடன்படிக்கைகளிலிருந்து தேவனுடனான நமது உறவைப் பற்றி அதிகம் கற்றுக்கொள்ளலாம்.

ஆனால் இந்த பாடத்தில் எதன்மீது கவனம் செலுத்தப்போகிறோமேன்றால், தேவனின் முக்கிய உடன்படிக்கைகளைப் பற்றி வேதம் என்ன கற்பிக்கிறது என்பதன்மீதும் அவர் தனது ராஜ்யத்தை தீர்க்கமாக நிர்வகித்த உடன்படிக்கைகள் மீதும் தான். ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோரோடு தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கைகள் மற்றும் புதிய உடன்படிக்கை என்று நாம் அடிக்கடி சொல்லும் எதிர்கால உடன்படிக்கை ஆகிய ஆறு நன்கு அறியப்பட்ட, வேதாகம உடன்படிக்கைகளை இங்கே நாம் மனதில் வைத்துள்ளோம். இந்த எல்லா நிகழ்வுகளிலும், தேவன் தனது ராஜ்யத்தை உடன்படிக்கைகள் மூலம் வழிநடத்தினார்.

இந்த முக்கிய தெய்வீக உடன்படிக்கைகள் ஒவ்வொன்றையும் இந்த பாடத்தில் பின்னர் பார்ப்போம். ஆனால் இந்த கட்டத்தில், மோசேயுடன் அவர் செய்த உடன்படிக்கையை சுருக்கமாகப் பார்ப்பதன் மூலம், தேவன் செய்த உடன்படிக்கைகளின் தன்மையைப் பற்றிய நுண்ணறிவுகளை எவ்வாறு அதிகார அரசு- அடிமை அரசு ஒப்பந்தங்கள் நமக்குத் தருகின்றன என்பதை விளக்கமாக பார்ப்போம். மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கையைப் பார்ப்பது முக்கியமானது, ஏனென்றால் பழைய ஏற்பாட்டில் உள்ள வேறு எந்த உடன்படிக்கையையும் விட வேதம் இந்த உடன்படிக்கையைப் பற்றி அதிகம் வெளிப்படுத்துகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கையை நாம் பார்க்கும்போது, அது பண்டைய கிழக்கத்திய சுசிரைன்-வாசல் (அதிகார அரசு – அடிமை அரசுடன் செய்யும்) ஒப்பந்தங்களை ஒத்த வழிகளில் கட்டமைக்கப்பட்டது என்பது விரைவில் தெளிவாகிறது. மோசேயுடன் செய்த உடன்படிக்கை இந்த ஒப்பந்தங்களில் நாம் பார்த்த அதே மூன்று கூறுகளைக் கொண்டிருந்தது. இந்த ஒற்றுமை, இஸ்ரவேலின் மகாராஜாவாகிய தேவன் அடிப்படையில் தனது ராஜ்யத்தை நிர்வகிப்பதற்கான தனது உடன்படிக்கைகளை நிறுவினார் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

யாத்திராகமம் 19:4-6 யைக் கவனித்து பார்த்தால், அங்கு தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேல் தேசத்துடன் செய்த அவருடைய உடன்படிக்கையைத் தொடங்கினார். தேவன் இவ்வாறு சொன்னார்:

> நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (யாத்திராகமம் 19:4-6).

யாத்திராகமம் 19-24 வரை சொல்லப்படும் சீனாய் மலையில் இஸ்ரவேலுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் நீண்ட பதிவை இந்தப் பகுதி அறிமுகப்படுத்துகிறது. தேவன் இஸ்ரவேலுடன் "உடன்படிக்கை" செய்வதையும் அது அவருடைய ராஜ்யத்துடன் இந்த உடன்படிக்கையை இணைக்கிறது என்பதையும் இது வெளிப்படையாகக் குறிக்கிறது என்பதைக் கவனித்து பாருங்கள். நாம் இங்கே பார்ப்பது போல், இது இஸ்ரவேலை "ராஜரீக ஆசாரியக் கூட்டமாக ஆக்குவதன் மூலம் தேவனுடைய ராஜ்யத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்த ஆசாரிய உடன்படிக்கை வடிவமைக்கப்பட்டது."

இதே பத்தியில், அரச கருணை, அடிமை விசுவாசம் மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படை மும்மடங்கான இயக்கவியலையும் நம்மால் பார்க்க முடியும்.

முதலில், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவித்த போது, தேவன் இஸ்ரவேலர்களுக்கு அவர் காட்டிய தெய்வீக கருணையை நினைவுபடுத்தினார். அவர் வசனம் 4 இல் இவ்வாறு கூறினார்:

> நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள் (யாத்திராகமம் 19:4).

பூர்வ மனித ராஜாக்களைப் போலவே, தேவன் இஸ்ரவேலர்களுக்காக மகத்தான காரியங்களைச் செய்திருப்பதை நினைவுபடுத்தினார். சீனாய் மலையில் அவர் செய்த உடன்படிக்கையின் மூலம் அவர் இஸ்ரவேலுடன் ஏற்படுத்திய உறவுக்கு அவரது கருணை அவசியமாக இருக்கிறது.

இரண்டாவதாக, தேவன் இந்த உடன்படிக்கையை ஆரம்பித்தபோது மனிதர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். 5 வது வசனத்தை மீண்டும் கவனியுங்கள்:

> இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது (யாத்திராகமம் 19:5).

பண்டைய கிழக்கத்திய அதிகாரவர்க்கத்தை சேர்ந்தவர்களைப் போலவே, தேவன் தனது ராஜ்யத்தின் மக்களிடமிருந்து நம்பகத்தன்மையை வேண்டினார். மோசேயுடன் செய்த உடன்படிக்கை தேவனின் அரச கருணையால் தொடங்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்டாலும், தேவன் இன்னும் தம்முடைய சத்தத்துக்கு கீழ்ப்படிந்து அவருடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டார்.

மூன்றாவதாக, மோசேயின் உடன்படிக்கை இஸ்ரவேலுக்கு விளைவுகளையும் ஏற்படுத்தியது. இந்த காரியம் 5-6 வசனங்களில் தெளிவாகிறது:

> இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (யாத்திராகமம் 19:5-6).

இஸ்ரவேலர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவர்கள் பெரும் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்பதை இஸ்ரவேலின் தெய்வீக ராஜாவாக தேவன் தெளிவாக்கினார். மற்ற எல்லா தேசங்களையும் விட அவர்கள் அவருடைய பொக்கிஷமான உடைமையாக இருப்பார்கள். அவர்கள் தேவ ஆசாரியர்களின் ராஜ்யமாக, பரிசுத்த தேசமாக மாறுவார்கள். மேலும் யாத்திராகமம் 19-24 மீண்டும் மீண்டும் விளக்குவது போல், இஸ்ரவேலர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உண்மையற்றவர்களாக இருந்தால், அவர்கள் தேவனின் சாபங்களுக்கு ஆளாக நேரிடும்.

மோசேயின் நாட்களில் இஸ்ரவேலுடன் தேவன் செய்த உடன்படிக்கைக்கும் அதிகார அரசு- அடிமை அரசு ஒப்பந்தங்களுக்கும் இடையிலான இந்த முக்கியமான ஒற்றுமைகளை மறுப்பது கடினம். ஆனால் சமீபத்திய சதாப்தங்களில், பல வேதாகம விளக்க அறிஞர்கள் வேறு சில முக்கிய வேதாகம உடன்படிக்கைகள் அரசு மானியங்களுக்கு இணையாக இருக்கின்றன என்று வாதிட்டனர். அவர்களைப் பொறுத்தவரையில், அரச மானியங்கள் உண்மையாக இருப்பதன் அவசியத்தையும் ஆசீர்வாதம் மற்றும் சாபங்களின் விளைவுகளையும் உள்ளடக்கவில்லை. மேலும் இந்த வெளிச்சத்தில், இந்த வேத வியாக்கியான அறிஞர்கள் ஆதாமுடனும், மோசேயுடனும் தேவன் செய்த உடன்படிக்கைகள் சுசரைன் – வாசல் (அதிகார வர்க்கம் – அடிமை வர்க்கம்) ஒப்பந்தங்கள் போல் இருந்தன என்று வாதிட்டனர்; அவை நிபந்தனைக்குட்பட்ட, கட்டாய உடன்படிக்கைகளாக இருந்தன. ஆனால் இந்த கண்ணோட்டத்தில், தேவன் நோவாவோடும், ஆபிரகாமோடும், தாவீதோடும் செய்த உடன்படிக்கைகளை மற்றொரு கோணத்தில் பார்த்தால், அவைகள் நிபந்தனையற்ற மற்றும் வாக்குத்தத்த புதிய உடன்படிக்கைகளாக இருக்கின்றன.

ஆனால் சில வேதாகம உடன்படிக்கைகளை கட்டாயமானதாவும் மற்றவற்றை உறுதிமொழியாகவும் பார்ப்பது போதுமானது கிடையாது. சில தொல்பொருள் எடுத்துக்காட்டுகள் அரச மானியங்களின் நம்பிக்கைத்தன்மை அல்லது ஆசீர்வாதம் மற்றும் சாபங்கள் ஆகியவற்றின் அவசியத்தை வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவைகளில் பல அப்படி *கூறவில்லை* என்று பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பண்டைய கிழக்கத்திய நாடுகளுக்கு அருகிலிருக்கும் ராஜாக்கள் தங்கள் கீழ் இருப்பவர்களிடம் எப்போதும் கீழ்ப்படிதலைக் கட்டாயப்படுதினார்கள் என்பதையும் இந்த அறிஞர்கள் சரியாகக் கவனிக்கின்றனர். ஒவ்வொரு தெய்வீக உடன்படிக்கையும் தேவன் ராஜாவாகவும், அவருடைய மக்கள் அவருடைய ஊழியர்களாகவும் இருக்கும் உறவுகளை ஏற்படுத்தியது. எனவே, தேவன் செய்த உடன்படிக்கைகளை நேரடியாகக் குறிப்பிடும் ஒவ்வொரு வேதாகமப் பகுதியும் தெய்வீக கருணை, மனித நம்பகத்தன்மை மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளை நேரடியாகக் குறிப்பிடுகிறது.

> சில சமயங்களில் வேத அறிஞர்கள் சில உடன்படிக்கைகள் உறுதிமொழி என்றும் மற்றவை கட்டாயமானவை என்றும் பரிந்துரைத்துள்ளனர்; ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் ஒரு வாக்குத்தத்த உடன்படிக்கை என்றும், சீனாயில் கொடுக்கப்பட்ட பிரமாணம் ஒரு கட்டாய உடன்படிக்கை என்றும் சொல்கின்றனர். ஆனால் உண்மையில்,

> வேதாகமத்திலும், பண்டைய கிழக்கத்திய நாடுகளிலும் நாம் பார்ப்பது என்னவென்றால், ஒவ்வொரு உடன்படிக்கைக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. வாக்குத்தத்தங்கள் வழங்கப்படுகின்றன, ஆனால், அவை உறவைப் பேணுவதற்கும் பராமரிப்பதற்குமான ஒரு எதிர்பார்ப்புடன் தரப்பட்டன. இதை தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்த பூமியை கொடுக்கும் நிலம் வழங்கும் ஒப்பந்தத்தில் கூட பார்க்கிறோம். அதற்குப் பிறகு, அதிகாரம் 17 மற்றும் அதிகாரம் 18 இல் "நீங்கள் எனக்கு முன்பாக நடந்து, உங்கள் பிள்ளைகளுக்கு என் வழிகளைக் கற்பியுங்கள். நீதியிலும் நியாயத்திலும் நடங்கள்" என்கிற எதிர்பார்ப்பு உள்ளது. எனவே, தேவன் செய்த தனது உடன்படிக்கையில் பெரிய வரங்களைத் தருகிறார், ஆனால் பெரிய ராஜாவிடம் அன்பு, நம்பகத்தன்மை, பக்தி ஆகியவற்றின் எதிர்பார்ப்பு உள்ளது.
>
> – Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

இப்போது நாம் தேவ ராஜ்யத்திற்கும் அவருடைய உடன்படிக்கைகளுக்கும் இடையே உள்ள அடிப்படை தொடர்பை அறிமுகப்படுத்தியிருக்கிறோம், இந்த பாடத்தில் நமது இரண்டாவது முக்கிய தலைப்பான பழைய ஏற்பாட்டில் உள்ள உடன்படிக்கைகளின் வரலாறுக்கு திரும்புவோம்.

# உடன்படிக்கைகளின் வரலாறு

கிறிஸ்து மனிதனாக அவதாரம் எடுப்பதற்கு முன் பூமியில் தேவ ராஜ்யம் எவ்வாறு வளர்ந்தது என்பதற்கான வரலாற்றுப் பதிவுகளை பழைய ஏற்பாடு நமக்கு வழங்குகிறது. ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோரின் நாட்களிலும், பின்னர் புதிய உடன்படிக்கையிலும், உடன்படிக்கைகளைச் செய்ய தேவன் வரலாற்றில் வியத்தகு முறையில் தலையிட்டார் என்பதை இந்த வேத பகுதிகள் வெளிப்படுத்துகின்றன. இப்போது, இந்த உடன்படிக்கைகள் அனைத்தும் தேவ ராஜ்யத்தின் விரிவாக்கத்தை நிர்வகிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் வரலாற்றின் வெவ்வேறு கட்டங்களில் தேவ ராஜ்யத்திற்கு பொருத்தமான பல்வேறு கொள்கைகளை வலியுறுத்தின.

பழைய ஏற்பாட்டில் தெய்வீக உடன்படிக்கைகளின் வரலாற்றை விவரிக்க பல வழிகள் உள்ளன. ஆனால் நாம் தேவனின் உடன்படிக்கைகளை மூன்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குழுக்களாகப் பிரிப்போம்: முதலில், தேவனின் ஆரம்பகால உலகளாவிய உடன்படிக்கைகள்; இரண்டாவதாக, இஸ்ரவேலுடனான அவரது தேசிய உடன்படிக்கைகள்; மற்றும் மூன்றாவது, புதிய உடன்படிக்கை. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த உடன்படிக்கையானது வரலாற்றின் உச்சக்கட்டத்தில் வெளிவரும். முதலில் உலகளாவிய உடன்படிக்கைகளுக்கு வருவோம்.

## உலகளாவிய உடன்படிக்கைகள்

ஆதாம் மற்றும் நோவாவுடன் தேவன் செய்த உடன்படிக்கைகளை ”உலகளாவியம்” என்று நாம் பேசும்போது, தேவன் இஸ்ரவேலை தனது விசேஷித்த மக்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு ஆதிகால வரலாற்றில் மனிதகுலம் முழுவதையும் கொண்டு அவற்றை உருவாக்கினார் என்பதை நாம் மனதில் வைத்திருக்கிறோம். இந்த அர்த்தத்தில், நாம் “தேவன் யாருக்கு கருணை காட்டினார்? தேவனுக்கு உண்மையாக இருக்கக் கடமைப்பட்டவர்கள் யார்? அவருடைய ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளை யார் பெறுவார்கள்? போன்ற கேள்விகளை கேட்க முடியும். இதற்கான பதில்: இதுவரை வாழ்ந்த அனைவரும் என்பதாகும். தேவனின் *அனைத்து* சாயல்களும் தேவனின் உடன்படிக்கையில் உள்ளன, ஏனெனில் அவை ஆதாம் மற்றும் நோவாவுடன் அவர் செய்த உடன்படிக்கைகள் மூலம் அவருக்குள் கட்டுப்பட்டிருக்கின்றன.

> எனவே, ஆதாம் மற்றும் நோவாவுடன் செய்யப்பட்ட இந்த இரண்டு உடன்படிக்கைகளும் மனிதகுலத்திற்கு அற்புதமான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கின்றன. முதலாவது, தேவன் ஒரு ஸ்திரீயின் வித்தாக, ஏவாளின் சந்ததிகளில் ஒருவராக, நம் இரட்சகராக இருக்கும் ஒரு மனிதனை அனுப்புவார்; இவர்தான் தேவன்-மனிதன் இயேசு கிறிஸ்து. உலகம் எவ்வளவு பொல்லாததாக மாறினாலும் நோவாவின் நாட்களில் நடந்தது போல ஒரு பேரழிவு வெள்ளத்தினாலோ அல்லது இயற்கையான தீர்ப்பாலோ அதை மீண்டும் ஒருபோதும் அழிக்கப்போவதில்லை என்று அவர் நோவாவுக்கு உறுதியளிக்கிறார்… எனவே, இவை ஆதாம் மற்றும் நோவாவுடன் செய்யப்பட்ட இரண்டு உடன்படிக்கைகள் ஆகும்… ஆபிரகாம் மற்றும் மோசே மற்றும் தாவீது ஆகியோருடன் செய்யப்பட்ட தேசிய உடன்படிக்கைகளை விட பரந்த வாசகர்கள் மற்றும் உலகின் இரட்சிப்பில் தேவனின் பரந்த கிரியையைப் பார்க்கின்றன.
>
> – Dr. மைக் ரோஸ்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த உலகளாவிய உடன்படிக்கைகளை காலவரிசைப்படி பார்ப்போம், ஆதாமுடன் தேவன் செய்த உடன்படிக்கை தொடங்கி நோவாவின் நாட்களில் அவர் செய்த உடன்படிக்கைக்கு நகருவோம். ஆதாமுடன் செய்த தேவனுடைய உடன்படிக்கையை முதலில் பரிசீலிப்போம்.

## ஆதாம்

ஆதாமில் மனிதகுலத்துடன் தேவன் செய்த உடன்படிக்கையின் வரலாற்று பதிவு ஆதியாகமம் 1-3 இல் தொடங்குகிறது. நாம் அனைவரும் அறிந்தபடி, ஆதாம் முதல் மனிதன் ஆவான், எனவே நாம் மனித வரலாற்றின் ஆரம்ப காலத்தைக் குறிப்பிடுகிறோம். ஆதாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையைப் பற்றிய வேத போதனைகள் தேவன் மனிதர்களுடன் கொள்ளும் தொடர்புகளின் மிக அடிப்படையான பரிமாணங்களில் சிலவற்றில் கவனம் செலுத்துவதை பார்ப்பதில் நாம் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இப்போது, "உடன்படிக்கை" என்ற வார்த்தை ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் காணப்படவில்லை என்பதை நாம் குறிப்பிட வேண்டும். இந்த காரணத்திற்காக, ஆதாமுடன் தேவன் ஒரு முறையான உடன்படிக்கை செய்தார் என்பதை சில கிறிஸ்தவர்கள் ஏற்கவில்லை. அப்படியிருந்தும், தேவன் மனிதகுலத்தின் பிரதிநிதியாக ஆதாமுடன் தனது முதல் உடன்படிக்கையை செய்தார் என்பதற்கு மூன்று சான்றுகள் உறுதியாகக் கூறுகின்றன.

இந்த பாடத்தில் பின்னர் நாம் பார்க்கப் போகிறது போல, முதலில் தெய்வீக உடன்படிக்கைகளின் அடிப்படை இயக்கவியலானது, ஆதியாகமம் 1-3 முழுவதும் தோன்றும், கருணை, மனித நம்பகத்தன்மை மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளாகும்.

தேவன் ஆதாமுடன் உடன்படிக்கை செய்து கொண்டார் என்பதற்கான இரண்டாவது ஆதாரம் ஓசியா 6:7 இல் காணப்படுகிறது. அங்கே இந்த வார்த்தைகளை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> அவர்களோ ஆதாமைப்போல் உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள் (ஓசியா 6:7).

ஓசியாவின் நாட்களில் தேவனுக்கு எதிராக இஸ்ரவேலர் நடத்திய கிளர்ச்சியை ஏதேன் தோட்டத்தில் ஆதாம் செய்த பாவத்துடன் இந்த பகுதி ஒப்பிடுகிறது. ஆதாமின் நாளில் இருந்ததைப் போலவே, இஸ்ரவேலர் தேவனின் உடன்படிக்கையை எப்படி மீறினார்கள் அல்லது உடைத்தார்கள் என்பதைப் பற்றி அது பேசுகிறது.

தேவன் ஆதாமுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார் என்பதற்கான மூன்றாவது ஆதாரம் ஆதியாகமம் 6:18 இல் தோன்றுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேதாகமத்தில் ”உடன்படிக்கை” அல்லது எபிரெய மொழியில் *பெரித்* (בְּרִית) என்ற வார்த்தை உண்மையில் இடம்பெறும் முதல் பகுதி இதுவாகும். இங்கே, தேவன் நோவாவிடம் இவ்வாறு பேசினார்:

> ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் (ஆதியாகமம் 6:18).

இந்த வேத பகுதி குறிப்பிடத்தக்கது, ஏனெனில் இது ஒரு உடன்படிக்கையைத் தொடங்குவதற்கு சாதாரண சொற்களைப் பயன்படுத்தவில்லை. பொதுவாக, எபிரெய வினைச்சொல் *காரத்* (כָּרַת), அதாவது ”வெட்டுதல்” என்பது ஒரு புதிய உடன்படிக்கை செய்வதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இங்கே ”நிறுவுதல்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, *கும் (קוּם)* என்ற எபிரெய வினைச்சொல்லில் இருந்து வந்தது, அதாவது ”உறுதிப்படுத்துதல்” அல்லது ஏற்கனவே தொடங்கப்பட்ட ஒரு உடன்படிக்கையை நிறுவுதல் என்பது இதன் அர்த்தமாகும். தேவன் நோவாவிடம் தனது உடன்படிக்கையை ஏற்படுத்தப் போவதாகக் கூறியபோது, தேவன் முன்பு ஆதாமுடன் செய்த ஏற்கனவே உள்ள உடன்படிக்கையை உறுதிப்படுத்தப் போகிறார் என்று அர்த்தம்.

ஆதாமின் நாட்களில் தேவன் செய்த உடன்படிக்கை மனிதகுலத்துடன் தேவன் கொண்டிருந்த தொடர்புகளின் மிக அடிப்படையான அம்சங்களைக் குறிக்கிறது. இந்த காரணத்திற்காக, நாம் அதை தேவனின் ”அஸ்திபார உடன்படிக்கை” என்று அழைக்கலாம். இந்த உடன்படிக்கையில், தேவன் அனைத்து மனிதர்களுக்கும் வாழ்க்கையின் அடிப்படை அம்சங்களை அமைத்துக்கொடுக்கிறார். ஆதாமும் ஏவாளும் தேவனின் அரச மற்றும் ஆசாரிய சேவை செய்வதற்கும் அவருடைய ராஜ்யத்தை பூமியின் கடைசி வரை பரப்புவதற்கும் நியமிக்கப்பட்டனர். தேவன் அவர்களின் விசுவாசத்தை சோதித்தார். ஆதாமும் ஏவாளும் அவருக்குக் கீழ்ப்படிந்தால், அவர் பெரிய ஆசீர்வாதங்களை வழங்கியிருப்பார். ஆனால் தேவனுக்கு அவர்கள் உண்மையாக இல்லாததால் தெய்வீக சாபங்களின் விளைவுகளுக்கு அது வழிவகுத்தது. சுருக்கமாக, ஆதாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை அவருடைய ராஜ்யத்தில் நமது பங்கின் அடித்தளத்தை நிறுவியது.

ஆதாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையைத் தொடர்ந்து, இரண்டாவது உலகளாவிய உடன்படிக்கை நோவாவின் நாட்களில் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை ஆகும். இந்த உடன்படிக்கையைப் பற்றி அதிகம் கூறலாம், ஆனால் வேதாகமக் கணக்கில் முன்னணியில் வரும் சில மையப் பிரச்சனைகளைப் பார்ப்போம்.

## நோவா

நோவாவுடன் செய்யப்பட்ட தேவனின் உடன்படிக்கை தேவராஜ்யத்தின் ஆரம்ப காலத்தில் நிறுவப்பட்டது மற்றும் மனிதகுலம் முழுவதையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிர்கொள்ளும் சில அடிப்படை பிரச்சனைகளைப் பற்றி பேசியது. நோவாவின் உடன்படிக்கை முதலில் ஆதியாகமம் 6 இல் ஜலப்பிரளயத்திற்கு முன் குறிப்பிடப்பட்டுள்ளது, பின்னர் மீண்டும் அதிகாரம் 9 இல் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் ஆதியாகமம் 6:18 இல் என்ன சொன்னார் என்பதை நினைவுகூரவும்:

> ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும் - உன்னோடேகூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள் (ஆதியாகமம் 6:18).

ஜலப்பிரளயத்திற்கு முன், பேழையைக் கட்டுவதற்கும் விலங்குகளை பேழைக்குள் கொண்டுவருவதற்குமான நிபந்தனைகளை நோவா நிறைவேற்றினால், நோவாவையும் அவரது குடும்பத்தையும் மீட்பதாக தேவன் உடன்படிக்கை மூலம் வாக்குத்தத்தம் கொடுத்தார். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, ஆதியாகமம் 9:9-11இல், நோவாவுடன் செய்த தேவனின் உடன்படிக்கையின் புதுப்பித்தலைக் காண்கிறோம். இந்த வேத பகுதியில், தேவன் நோவாவிடம் கூறினார்:

> நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன். பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லை (ஆதியாகமம் 9:9- 11).

நாம் இங்கு பார்க்கிறபடி, நோவாவுடன் தேவன் செய்த உடன்படிக்கை நோவாவுடனும் அவனுடைய சந்ததிகளுடனும் பேழையில் இருந்த “எல்லா ஜீவஜந்துக்களுடனும்” வெறுமனே செய்யப்படவில்லை. “இனி ஒருபோதும் ஜலப்பிரளயத்தினால் எல்லா மாம்சமும் அழிந்துபோகாது” என்று தேவன் உறுதியளித்தார்.

தேவனுக்கு எதிரான மனிதகுலத்தின் கலகம் தேவனின் நியாயத்தீர்ப்பாகிய ஜலப்பிரளயத்தைக் கொண்டு வந்த பிறகு தேவன் நோவாவுடன் தனது உடன்படிக்கையை செய்தார். ஆனால் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, நோவாவுடன் தேவன் செய்த உடன்படிக்கை உருவாக்கப்பட்ட ஒழுங்கின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தது. இந்த காரணத்திற்காக, நாம் அதை தேவன் செய்த ”நிலையான உடன்படிக்கை” என்று குறிப்பிடலாம். நோவாவும் அவருடைய குடும்பத்தினரும் பேழையை விட்டு வெளியேறியபோது, பாவத்தின்மீது மனிதகுலத்திற்கு இருந்த நாட்டத்தை தேவன் ஒப்புக்கொண்டார். உடன்படிக்கையின் மூலம், பாவமுள்ள மனிதர்கள் தனது ராஜ்ய நோக்கங்களை நிறைவேற்ற முடியும் என்பதற்காக அவர் ஒரு நீண்ட கால உத்தியை அமைத்தார். ஆதியாகமம் 8:21-22 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார் (ஆதியாகமம் 8:21-22).

தம்முடைய ராஜ்யத்தை முன்னேற்றுவதற்காக, பாவமுள்ள மனிதர்கள் தமக்கான ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு இயற்கையானது நிலையானதாக இருக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் அளித்தார். இந்த உலகளாவிய உடன்படிக்கை, ஆதாமுடனான உடன்படிக்கையைப் போலவே, அடிப்படை ராஜ்யக் கொள்கைகளை நிறுவியது. அது எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் எல்லா மக்களுக்கும் பொருந்தும்.

நாம் இப்போது பார்த்தபடி, தேவனின் முக்கிய உடன்படிக்கைகளின் வரலாறு ஆதாம் மற்றும் நோவாவுடன் செய்த உலகளாவிய உடன்படிக்கைகளுடன் தொடங்கியது.  இப்போது, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் தனது ராஜ்ய நோக்கங்களின் மைய நிலைக்கு நகர்ந்தபோது தேவன் செய்த ராஜ்ஜிய உடன்படிக்கைகளுக்கு நம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

## தேசிய உடன்படிக்கைகள்

ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையில் தொடங்கி, மோசேயில் இஸ்ரவேலுடனான உடன்படிக்கை மற்றும் இறுதியாக தாவீதின் உடன்படிக்கையில் தொடங்கி ராஜ்ய உடன்படிக்கைகளையும் காலவரிசைப்படி பார்ப்போம்.  ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையுடன் ஆரம்பிக்கலாம்.

### ஆபிரகாம்

ஆபிரகாம் ஒவ்வொரு இஸ்ரவேலரின் தந்தை அல்லது முற்பிதா ஆவார். இந்த காரணத்திற்காக, தேவன் ஆபிரகாம் மூலம் தனது முதல் ராஜ்ய உடன்படிக்கையை செய்தார். ஆதியாகமம் 15, 17ல் இந்த உடன்படிக்கையின் நேரடிக் குறிப்புகளை நாம் காண்கிறோம்.  அவர் ஆபிராம் என்று முன்பு அழைக்கப்பட்ட  ஆபிரகாமுடன் செய்யப்பட்ட தேவனின் உடன்படிக்கையின் முதற்குறிப்பு ஆதியாகமம் 15:18 இல் தோன்றுகிறது:

> அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணினார் (ஆதியாகமம் 15:18).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இங்கே "உடன்படிக்கை செய்து" என்பதற்கு, எபிரெய சொல்லான *காரத்* (כָּרַת) பயன்படுத்தப்பட்டு "உடன்படிக்கையை வெட்டு" என்பதாக சொல்லப்பட்டுள்ளது. நாம் முன்பே குறிப்பிட்டது போல, இது ஒரு உடன்படிக்கை உறவின் தொடக்கத்தைக் குறிக்கும் சாதாரண வழியாகும். பின்னர், பல ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் முற்பிதாக்களுடன் தனது உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார் அல்லது புதுப்பித்தார். ஆதியாகமம் 17:1-2 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் (ஆதியாகமம் 17:1-2).

இது ஆபிரகாமுடனான இரண்டாவது, வேறுபட்ட உடன்படிக்கை அல்ல. மாறாக, தேவன் தனக்கும் ஆபிரகாமுக்கும் இடையே தம்முடைய உடன்படிக்கையை "உறுதிப்படுத்துவார்" என்று கூறினார். "உறுதிப்படுத்து" என்ற வார்த்தைக்கு எபிரெய வினைச்சொல் *'கும்'* (קוּם) பயன்படுத்தப்பட்டுள்ளது. நோவாவுடனும் ஆதாமுடனுமான உடன்படிக்கையை தேவன் நிறுவிய போதும் அல்லது உறுதிப்படுத்தின போதும் நாம் பார்த்த அதே வெளிப்பாட்டைத் தான் ஆதியாகமம் 6:18 இல் பார்த்தோம்.

> தேவன் அதைப் பற்றி பேசும்போதெல்லாம், "ஆபிரகாமுடன் செய்யப்பட்ட என் உடன்படிக்கை" என்று சொல்லுகிறார். ஒன்றுக்கு மேற்பட்டதை அவர் ஒருபோதும் குறிப்பிடுவதில்லை. மேலும் அவர் ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன், "ஆபிரகாமுக்கு நான் செய்துகொடுத்த சத்தியத்தை" என்று குறிப்பிட்டு அந்த உடன்படிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறார். உதாரணமாக, இது முழு உடன்படிக்கையையும் குறிக்கிறது, மேலும் இது ஆதியாகமம் 12, 15, 17 மற்றும் 22 இல் கொடுக்கப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களையும் உள்ளடக்கியது. பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவும் இதே போன்ற கருத்துக்களைக் கூறுகிறார். எனவே, ஒன்றுக்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் இருப்பதாக குறிப்பிடும் விதத்தில், வேதாகமம் அதைப்பற்றி குறிப்பிடும்போது, வேறொன்றைப்பற்றி சொல்லுவதாக ஒருபோதும் நினைக்க வேண்டுவதில்லை... வேறு எந்த விளக்கமும் சற்று வலுக்கட்டாயமாக மாறும் என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் எல்லா ஆதாரங்களும் மிக இயல்பாக புரிந்து கொள்ள வேண்டியவைகளே. தேவன் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கையை மட்டுமே செய்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

– Dr. ஜெஃப்ரி ஜே. நிஹாஸ்

ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை அவரது சந்ததியினரை மற்ற மனிதகுலத்திலிருந்து வேறுபடுத்தியது. இந்த உடன்படிக்கையின் மூலம், தேவன் தனது ராஜ்யத்தை உலகம் முழுவதும் பரப்புவதில் முக்கிய பங்கை வகிக்க இஸ்ரவேலை தேர்ந்தெடுத்தார். ஆபிரகாமின் சந்ததியினர் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சொந்தமாக்குவார்கள். அவர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை பூமியின் எல்லைகள் வரை பரப்புவார்கள். இந்த காரணத்திற்காக, ஆபிரகாமின் உடன்படிக்கை இஸ்ரவேலுக்கான தேவனின் வாக்குத்தத்த உடன்படிக்கை மற்றும் அவரது ”இஸ்ரவேலின் தெரிந்துகொள்ளப்படுதல் உடன்படிக்கை” என விவரிக்கப்படலாம். ஆதியாகமம் 15:18 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> அந்நாளில் ஆண்டவர் ஆபிராமுடன் உடன்படிக்கை செய்து, ”உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுக்கிறேன்” (ஆதியாகமம் 15:18)

மற்றும் ஆதியாகமம் 17:2 இல்:

> நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் (ஆதியாகமம் 17:2).

ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையானது, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய இஸ்ரவேலரின் தேவ ராஜ்ய நோக்கங்களை நிறுவியது.

தேவன் ஆபிரகாமுடன் தனது உடன்படிக்கையை ஏற்படுத்திய பிறகு, தேவன் மோசேயில் இஸ்ரவேலுடன் மற்றொரு தேசிய உடன்படிக்கையை செய்தார்.

## மோசே

மோசேயின் நாட்களில் இஸ்ரவேலுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கைக்கு முரணாக இல்லை என்பதை உணர வேண்டியது அவசியம். ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கைக்கு மாற்றாக மோசே தன்னைக் காணவில்லை. மாறாக, மோசே ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையை தனது சொந்த ராஜ்ய வேலையின் அடிப்படையாக குறிப்பிடுகிறார். யாத்திராகமம் 32:13 இல் தேசத்தின் சார்பாக மோசே தேவனிடம் ஜெபித்த விதத்தைக் கவனியுங்கள்:

> உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை

> வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் (யாத்திராகமம் 32:13).

நாம் இங்கே பார்ப்பது போல், மோசேயுடன் செய்யப்பட்ட ராஜ்ய உடன்படிக்கையானது ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு பதிலாக செய்யப்பட்ட ஒரு புத்தம் புதிய உடன்படிக்கை அல்ல. மாறாக, அது தேவன் ஆபிரகாமுடன் செய்த தெரிந்துகொள்ளப்படுதல் உடன்படிக்கையின் மீது கட்டப்பட்டது மற்றும் மேம்படுத்தப்பட்டது.

யாத்திராகமம் 19-24 இல் மோசேயின் நாட்களில் தேவன் இஸ்ரவேலுடன் உடன்படிக்கை செய்ததற்கான முதன்மையான பதிவை நாம் காண்கிறோம். எகிப்தில் இருந்து வெளியேறிய இரண்டாம் தலைமுறை இஸ்ரவேலருடன் இந்த உடன்படிக்கையை புதிப்பித்தலை உபாகமம் புத்தகத்தில் காண்கிறோம். தேவன் சீனாய் மலையின் அடிவாரத்தில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தையும் கூட்டியபோது, அவர் அவர்களை ஒரு பெரிய தேசமாக, அரசியல் ரீதியாக ஒன்றுபட்ட மக்களாக வடிவமைத்தார். நிச்சயமாக, மோசேயின் காலத்திற்கு முன்பே தேவ ஜனங்களுக்கு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இருந்தன. ஆனால் ஒவ்வொரு புதிய தேசத்தைப்போல, இந்த நேரத்தில் இஸ்ரவேலின் முக்கிய தேவைகளில் ஒன்று சட்டங்களின் அமைப்பு, மற்றும் அவற்றை நிர்வகிக்கும் ஒழுங்குமுறை அமைப்பாகும். இந்த காரணத்திற்காக, மோசேயுடன் செய்த உடன்படிக்கை தேவனின் ”நியாயப்பிரமாண உடன்படிக்கை” என்று சரியாக அழைக்கப்படலாம். உண்மையில், மோசேயின் உடன்படிக்கை நியாயப்பிரமாணத்தை மிகவும் வலியுறுத்தியது, இஸ்ரவேல் மக்கள் இந்த உடன்படிக்கையில் பிரவேசித்தபோது, அவர்கள் தேவனின் சட்டம் அனைத்தையும் கடைப்பிடிக்க ஒரு உறுதியான உறுதிமொழியை கொடுத்தார்கள். யாத்திராகமம் 19:7-8 இல் நமக்கு இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

> எனவே மோசே… கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான். அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள் (யாத்திராகமம் 19:7-8).

எனவே, இஸ்ரவேல் தேசத்துடன் செய்யப்பட்ட இரண்டாவது உடன்படிக்கை மோசேயுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை என்பதை நாம் காண்கிறோம், இந்த நேரத்தில் தேசத்திற்கு என்ன தேவை என்பதை துல்லியமாக வலியுறுத்தும் ஒரு உடன்படிக்கையானது தேவனின் நியாயப்பிரமாணமாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது, ஆபிரகாம் மற்றும் மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கைகளைப் பார்த்த பிறகு, பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் கடைசி ராஜ்ய உடன்படிக்கைக்கு நாம் திரும்ப வேண்டும்.

## தாவீது

இஸ்ரவேல் ஒரு முழுமையான ராஜ்யமாக மாறியபோது, தேவன் தாவீது ராஜாவுடன் ஒரு உடன்படிக்கை செய்தார். தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கை சீனாய் மலையில் தேவனின் உடன்படிக்கைக்கு இணங்கவில்லை. மாறாக, அது கட்டப்பட்டது மற்றும் மோசேயுடன் செய்த உடன்படிக்கையை மேம்படுத்தியது. 2 நாளாகமம் 6:16-ல் சாலொமோன் தெளிவுபடுத்தியபடி, தாவீதுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண த்திற்கு உண்மையாக இருப்பதைச் சார்ந்தது. நாம் இப்படி படிக்கிறோம்:

> இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியானை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்ததுபோல, உன் குமாரரும் என் நியாயப்பிரமாணத்தில் நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும்.
> (2 நாளாகமம் 6:16).

இந்தப் பகுதியில் குறிப்பிடுவது போல, தாவீதுடன் செய்யப்பட்ட தேவனின் உடன்படிக்கை தாவீதின் அரச குடும்பத்தை மையமாகக் கொண்டது, ஆனால் தாவீதின் வீடு " மோசேயின் நியாயப்பிரமாணமாகிய [தேவனின்] நியாயப்பிரமாணத்தின்படி நடக்க" வேண்டும்.

பொதுவாக, 2 சாமுவேல் 7ல் தாவீதின் ஆட்சியின் உச்சத்தில் தேவன் இந்த உடன்படிக்கையை செய்தார் என்று வேதாகம விளக்க அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இந்த அதிகாரம் "உடன்படிக்கை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்றாலும், தேவன் தாவீதுடன் ஒரு உடன்படிக்கை செய்தார் என்பதை பல பகுதிகள் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றன. ஒரு உதாரணம், சங்கீதம் 89:3-4 இல் தாவீதுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை கவனியுங்கள்:

> என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைபண்ணி, என் தாசனாகிய தாவீதை நோக்கி: என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன்" என்றீர் (சங்கீதம் 89:3-4).

நாம் இங்கு பார்க்கிறபடி, தாவீதின் உடன்படிக்கை இஸ்ரவேலில் அரசத்துவத்தை மையமாகக் கொண்டது. அல்லது இன்னும் தெளிவாகச் சொல்வதானால், அது தாவீதின் வீட்டை இஸ்ரவேலின் "எல்லா தலைமுறைகளுக்கும்" நிரந்தர அரச வம்சமாக நிறுவியது.

> 2 சாமுவேல் 7 இல் தாவீதுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தம் மீட்பின் வரலாற்றிற்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுவாக மீட்பின் வரலாற்றைப் புரிந்துகொள்வதில் இது ஒரு முக்கிய அத்தியாயமாகும்... தாவீதின் உடன்படிக்கை என்று அழைக்கப்படுவதை இந்த அதிகாரத்தில் பார்க்கிறோம். இது ஒரு மிக முக்கியமான உடன்படிக்கையாகும், இதில் நாம் இரட்சகரைப் பற்றிய ஒரு புதிய கண்ணோட்டத்தைக் காண்கிறோம், இந்த இரட்சகர் தாவீதின் குமாரனாக இருப்பார். "தாவீதின் குமாரன்" என்பது வேதத்தில் ஒரு சாதாரண சொல் அல்ல. "தாவீதின் குமாரனை" நீங்கள் பார்க்கும் ஒவ்வொரு முறையும் "ராஜா" என்ற வார்த்தையை நினைவில் கொள்வது அவசியம். தாவீது ராஜாவாக இருந்தார், இந்த அதிகாரத்தில், அவரது குமாரன் ராஜ்யத்தின் சிங்காசனமாகிய அரியணையில் என்றென்றும் அமர்வார் என்று கர்த்தர் அவருக்கு வாக்குத்தத்தம் அளித்தார். தாவீதின் சந்ததிகளில் ஒருவர் தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றும் ராஜாவாக இருப்பார்.
>
> — Mr.ஷெரிப் அதெஃப் ஃபாஹிம், மொழிபெயர்ப்பு

தாவீது தேவ ஜனங்கள் மீது ராஜாவானபோது, தேவன் தாவீதின் வீட்டை நிரந்தரமாக இஸ்ரவேலை ஆளும் தலைமுறையாக நிறுவுவதன் மூலம் அவருடைய ராஜ்யத்தை முன்னேற்றினார். அப்போதிருந்து, தாவீதின் குடும்பத்தின் நம்பகமான ஆட்சியின் மூலம், தேவனுடைய ராஜ்யத்தை பூமியின் கடைசி வரை பரப்புவதில் இஸ்ரவேல் தனது பங்கை நிறைவேற்றும். இந்த காரணத்திற்காக, நாம் தாவீதின் உடன்படிக்கையை தேவனால் செய்யப்பட்ட "ராஜாங்கத்தின் உடன்படிக்கை" என்று அழைக்கலாம்.

தேவனுடைய உடன்படிக்கைகளின் வரலாறு எவ்வாறு உலகளாவிய மற்றும் தேசிய உடன்படிக்கைகளை உள்ளடக்கியது என்பதை இப்போது நாம் பார்த்தோம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவன் தனது ராஜ்யத்தின் இறுதிக் கட்டத்தில் செய்வார் என்று கணித்த உடன்படிக்கையாகிய புதிய உடன்படிக்கையை நாம் பார்க்க வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## புது உடன்படிக்கை

புதிய உடன்படிக்கையைப் பற்றி வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்பதை பெரும்பாலான சுவிசேஷ கிறிஸ்தவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள், ஏனெனில் இது புதிய ஏற்பாட்டு போதனையின் முக்கிய மையமாகும். ஆனால் புதிய உடன்படிக்கையைப் பற்றி புதிய ஏற்பாட்டில் கூறுவது பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் புதிய உடன்படிக்கையைப் பற்றி கூறியவற்றில் வேரூன்றியுள்ளது என்பதை நாம் அடிக்கடி புரிந்து கொள்ளத் தவறுகிறோம். அவர்களின் பார்வையில், புதிய உடன்படிக்கை ஒவ்வொரு முந்தைய வேதாகம உடன்படிக்கையின் நிறைவேறுதலாகும். மேசியாவின் மூலம் கடைசி நாட்களில் அவருடைய ராஜ்ய நோக்கங்கள் நிறைவேற்றப்படும்போது தேவன் அவருடைய ராஜ்யத்தை எவ்வாறு நிர்வகிப்பார் என்பதை இது பிரதிபலிக்கிறது.

பல தீர்க்கதரிசிகள், இஸ்ரவேல் வம்சத்தாரின் உண்மையுள்ள மீதியானவர்களுடனும் யூதா குடும்பத்துடனும் சிறைபட்டுப்போன பிறகு தேவன் ஒரு உடன்படிக்கையை செய்வார் என்று முன்னறிவித்தார்கள். அந்த நேரத்தில், தேவனுடைய ராஜ்யம் மேசியா மூலம் பூமியின் கடைசி வரை பரவும். எரேமியா 31:31 ”புதிய உடன்படிக்கை” பற்றி எவ்வாறு பேசுகிறது என்பதை கவனியுங்கள்:

> இதோ, ”நாட்கள் வருமென்று” கர்த்தர் சொல்லுகிறார், ”அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்” (எரேமியா 31:31).

எசேக்கியேல் 37:26, மற்றும் பல சந்தர்ப்பங்களில், தீர்க்கதரிசி எசேக்கியேல் இதே உடன்படிக்கையை நித்திய ”சமாதான உடன்படிக்கை” என்று பேசினார். நாம் இப்படி படிக்கிறோம்:

> நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன்; அது அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருக்கும்; நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன் (எசேக்கியேல் 37:26).

மேலும், எல்லா கிறிஸ்தவர்களும் அறிந்தபடி, 1 கொரிந்தியர் 11:25 இல், கர்த்தருடைய இராப்போஜனத்தில் இயேசுவின் வார்த்தைகளை கொரிந்தியர்களுக்கு நினைவுபடுத்தியபோது, கிறிஸ்துவில் இந்த நித்திய புதிய சமாதான உடன்படிக்கை நிறைவேறியது என்பதை பவுல் தெளிவுபடுத்தினார்:

> இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் (1 கொரிந்தியர் 11:25).

கிறிஸ்துவில் இந்த புதிய உடன்படிக்கையின் மூலம், புதிய ஏற்பாட்டு யுகத்தில் தேவன் தனது ராஜ்யத்தை நிர்வகிக்கிறார். கிறிஸ்து தனது முந்தைய உடன்படிக்கைகளில் தேவன் நிறைவேற்றிய அனைத்தையும் நிறைவேற்றுவதால், புதிய உடன்படிக்கை தேவ ஜனங்களை ஆளுகிறது. இந்த காரணத்திற்காக, அதை தேவனின் ”நிறைவேறுதலின் உடன்படிக்கை” என்று சொல்லுவது பொருத்தமானதாக இருக்கலாம்.

இந்த நிறைவேறுதலின் உடன்படிக்கையானது, தேவ ஜனங்களை அவர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபின்பு, பூமியின் எல்லைகள் வரை தம்முடைய ராஜ்யத்தை பரப்பியபோது அவர்களை ஆளுவதற்காக ஏற்படுத்தப்பட்டு இருந்தது. இந்தப் புதிய உடன்படிக்கை, தம்முடைய ஜனங்களை தவறாமல் அவரைச் சேவிக்க முழுமையாக அதிகாரமளிக்கப்பட்ட, மன்னிக்கப்பட்ட, மீட்கப்பட்ட இனமாக மாற்றுவதற்கான தேவனுடைய அர்ப்பணிப்பாகும். எரேமியா 31:31-34 இல் இந்த மீட்பை எரேமியா விவரித்த விதத்தை கவனியுங்கள்:

> “இதோ, நாட்கள் வருமென்று” கர்த்தர் சொல்லுகிறார், “அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்… நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரேமியா 31:31-34).

இப்போது, கிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தின் இறுதிக் கட்டத்தை மூன்று கட்டங்களில் நிறைவேற்றுகிறார் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவர் தனது பூமிக்குரிய ஊழியம், பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்படுதல் மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலம் அதைத் தொடங்கினார். இது திருச்சபை வரலாறு முழுவதும் தொடர்கிறது. கிறிஸ்து மகிமையில் திரும்பும்போது அது அதன் நிறைவை அடையும். அந்த நாளில், புதிய உடன்படிக்கை தேவனின் உடன்படிக்கைகளின் முழு வரலாற்றின் நிறைவேறுதலாக இருக்கும். ஆதாம்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நோவா, ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோருடன் செய்யப்பட்ட உடன்படிக்கை நிர்வாகங்களுக்குப் பின்னால் இருக்கும் தேவனின் நோக்கங்களை அது நிறைவேற்றும்.

> எபிரெயர் 8 புதிய உடன்படிக்கை நிறுவப்பட்டதைப் பற்றி பேசுகிறது, இது ஒரு புதிய உடன்படிக்கை அல்ல. இந்த உடன்படிக்கை பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. உண்மையில், அவர் ஒரு புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தமான எரேமியா 31ல் இருந்து மேற்கோள் காட்டுகிறார். தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேலுடன் ஒரு உடன்படிக்கை செய்தார், ஆனால் ஒரு நாள் இஸ்ரவேல் அந்த உடன்படிக்கையை உடைத்துவிட்டது. ஒரு நாள் தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை மீண்டும் நிறுவுவார், மேலும் அந்த புதிய உடன்படிக்கை **கற்**பலகைகளில் எழுதப்பட்ட சட்டத்தை கொண்டிருக்காது என்று அவர் உறுதியளிக்கிறார். அது நம் இ**ரு**தயங்களில் எழுதப்பட்டிருக்கும்… எனவே, எரேமியா 31 இல் உள்ள புதிய உடன்படிக்கையின் வாக்குறுதி நிறைவேறியது, அதைத்தான் இங்கே ஆசிரியர் வாதிடுகிறார். அந்த நிறைவேற்றத்தின் வாக்குத்தத்தத்துடன், தேவனின் இரட்சிப்பு இப்போது இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் உள்ள எல்லா தேசங்களுக்கும் கடந்து போகிறது. எனவே, எல்லா நேரத்திலும், இதுதான் தேவனின் நோக்கம் என்றும், இது வாக்குத்ததங்களை நிறைவேற்றுவது என்றும் ஆசிரியர் கூறுகிறார்.
>
> – Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

தேவனின் ராஜ்யத்திற்கும் உடன்படிக்கைகளுக்கும் இடையே உள்ள தொடர்புகள் மற்றும் தேவன் தனது உடன்படிக்கைகளின் வரலாறு முழுவதும் தனது ராஜ்யத்தை எவ்வாறு முன்னேற்றினார் என்பதைப் பார்த்த பிறகு, நாம் நமது மூன்றாவது தலைப்பான உடன்படிக்கைகளின் இயக்கவியலுக்கு திரும்ப வேண்டும்.

# உடன்படிக்கைகளின் இயக்கவியல்

இந்தப் பாடத்தில் நாம் முன்னரே குறிப்பிட்டபடி, தெய்வீக கருணை, மனதனின் விசுவாசம் மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின்

விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படை இயக்கவியல் எல்லா தெய்வீக உடன்படிக்கைகளிலும் தோன்றுவதை சில வியாக்கியான அறிஞர்கள் மறுத்துள்ளனர். ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் வேதாகமப் பதிவும் தனித்தனியான முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளது என்பது உண்மைதான். ஆயினும்கூட, பழைய ஏற்பாட்டு வரலாற்றின் பரந்த வேதாகம சித்திரத்தை நாம் பார்வையில் வைத்திருக்கும்போது, ஒவ்வொரு உடன்படிக்கையின் ஒவ்வொரு நிர்வாகத்தின் கீழும் தேவன் தனது மக்களுடன் கொண்டுள்ள தொடர்புகளின் இயக்கவியல் நிலையானதாக இருப்பதைக் காணலாம்.

ஆதாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை உலகத்தின் தொடக்கத்தில் நிறுவப்பட்ட சில அடிப்படை வடிவங்களை வலியுறுத்தியது. நோவாவுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை இயற்கையின் ஸ்திரத்தன்மையை வலியுறுத்தியது. ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை தேவனின் வாக்குத்தத்தங்களையும் தெரிந்தெடுத்தலையும் வலியுறுத்தியது. மோசேயுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை தேவனின் நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தியது. தாவீதுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை தாவீதின் வம்சத்தை தேவனின் பிரத்தியேகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரச குடும்பமாக உயர்த்திக் காட்டியது. மேலும் புதிய உடன்படிக்கை நிறைவேறுதலை வலியுறுத்தியது.

ஆனால் இந்த வலியுறுத்தல்கள் உடன்படிக்கை வாழ்க்கையின் விரிவான விளக்கங்கள் அல்ல; அவை சில சிறப்பம்சங்களை மட்டுமே தொடுகின்றன. உடன்படிக்கையில் வாழ்வதன் இயக்கவியலின் முழுமையை அறிந்துகொள்ள, தேவனுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் வாழ்க்கை இந்த வலியுறுத்தல்களைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்கியது என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். தேவனுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையில் வாழ்வதன் இயக்கவியல் எப்போதும் தேவனின் கருணை, மனித நம்பகத்தன்மையின் தேவை மற்றும் மனிதனின் நம்பகத்தன்மை மற்றும் நம்பகமற்ற தன்மையின் விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இதைச் சொன்ன பிறகு, இந்த உடன்படிக்கை இயக்கவியல் இயந்திரத்தனமாக இயங்குவதாக ஒருபோதும் நினைக்காமலிருப்பது முக்கியம். உடன்படிக்கை இயக்கவியலை தேவன் செயல்படுத்துவது எப்போதுமே கணிக்கக்கூடியதாக இருக்கிறது. மாறாக, தனிநபர்கள், குழுக்கள் மற்றும் மனிதகுலம் முழுவதுமாக கையாண்டதால், தேவன் எப்போதும் தனது அரச உரிமையை தனக்காக வைத்தார். அவர் தனது பிரமாண்டமான ராஜ்ய நோக்கங்களை நிறைவேற்றும் வழிகளில் தனது உடன்படிக்கைகளின் இயக்கவியலைச் செயல்படுத்த ராஜாவாக தனது உரிமையைப் பயன்படுத்தினார். தேவைப்பட்டபோது அவர் கருணை காட்டினார். அவர் தனது ராஜ ஞானத்தின்படி விசுவாசத்தின் சில தரங்களை வலியுறுத்தினார். அவர் தனது சொந்த விருப்பப்படி ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் தந்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் ஏன் சிலருக்கு கருணை காட்டினார், மற்றவர்களுக்கு ஏன் கருணை காட்டவில்லை என்பதை நாம் பெரும்பாலும் புரிந்து கொள்ள முடியாது. நம்பகத்தன்மையின் சில தரநிலைகளை அவர் ஏன் மற்றவர்களை விட சிலருக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதினார் என்பதைப் புரிந்துகொள்ள நாம் சிரமப்படுகிறோம். சில சமயங்களில், தேவன் ஏன் சிலருக்கு ஆசீர்வாதங்களையும் மற்றவர்கள் மீது சாபங்களையும் பொழிந்தார் என்பதை நாம் விளக்க முடியாது. பல முறை, பழைய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் தேவன் ஏன் தனது ராஜ உரிமையை இந்த வழியில் அல்லது அந்த வழியில் பயன்படுத்தினார் என்பதை விளக்கினர். மற்ற நேரங்களில், அவர்கள் அப்படி செய்யவில்லை. ஆனாலும், தேவன் நல்லவர் என்றும் அவருடைய ஞானம் நம்முடைய ஞானத்தை விட அதிகமாக உள்ளது என்றும் நமக்குத் தெரியும். எனவே, அவருடன் செய்த உடன்படிக்கை வாழ்க்கையின் அடிப்படை இயக்கவியலை அவர் எவ்வாறு கையாண்டார் என்பதை நாம் பணிவுடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தேவன் செய்த உடன்படிக்கைகளின் இயக்கவியல் பழைய ஏற்பாட்டில் எவ்வாறு ஊடுருவுகிறது என்பதைத் திறந்து பார்க்க, ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையையும் சுருக்கமாகத் தொடுவோம். முதலில், நாம் முதன்மையான உலகளாவிய உடன்படிக்கைகளைப் பார்ப்போம். இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலுடன் தேவன் செய்த ராஜ்ய உடன்படிக்கைகளை நாம் கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையைப் பார்ப்போம். முதலில் இந்த இயக்கவியலைப் பார்ப்போம்.

## உலகளாவிய உடன்படிக்கைகள்

ஆதிகால வரலாற்றின் போது, தேவன் ஆதாமுடன் அஸ்திபாரங்களின் உடன்படிக்கையையும் நோவாவுடன் இயற்கையான ஸ்திரத்தன்மையின் உடன்படிக்கையையும் நிறுவினார். ஆனால் ஆதாமுடன் தேவனின் தொடர்புகள் வெறுமனே ராஜ்ய அஸ்திபாரங்களை ஸ்தாபிப்பதைக் குறிக்கவில்லை. மேலும், நோவாவுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் கீழ், மனிதகுலத்திற்கும் தேவனுக்கும் இடையிலான தொடர்புகள் இயற்கையின் ஸ்திரத்தன்மையை விட அதிகம் சம்பந்தப்பட்டவை. எல்லா தெய்வீக உடன்படிக்கைகளையும் போலவே, தேவன் இந்த உடன்படிக்கைகளின் கீழ் தெய்வீக கருணை, மனித நம்பகத்தன்மை மற்றும் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமைக்கான விளைவுகள் ஆகியவற்றின் இயக்கவியல் மூலம் வாழ்க்கையை நிர்வகித்தார்.

உலகளாவிய உடன்படிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் இது எப்படி உண்மையாக இருக்கிறது என்பதை சுருக்கமாகப் பார்ப்போம். முதலில் ஆதாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையிலும் பின்னர் நோவாவுடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்யப்பட்ட உடன்படிக்கையிலும் இருப்பதை பார்ப்போம். ஆதாமுடன் செய்யப்பட்டதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

## ஆதாம்

முதலாவதாக, முதல் ஆணும் பெண்ணும் பாவம் செய்வதற்கு முன்பே தேவன் அவர்களுக்கு அதிக கருணை காட்டினார். இந்த உலகத்தை ஒழுங்கின்மையிலிருந்து சீர்படுத்தி மனிதகுலத்திற்காக ஆயத்தம் செய்தார். அவர் ஒரு அற்புதமான தோட்டத்தை உருவாக்கி, அந்த தோட்டத்தில் ஆதாமையும் ஏவாளையும் வைத்தார். மேலும் நாளுக்கு நாள் தேவன் மனித இனத்திற்கு எல்லா வகையான சலுகைகளையும் வழங்கினார், அது அவர்கள் பாவத்தில் விழுந்த பிறகும் நீட்டிக்கப்பட்டது.

> அனைத்து வேதாகம உடன்படிக்கைகளும் தேவனின் கருணையை பல வழிகளில் காட்டுகின்றன. இதை நாம் காணக்கூடிய ஒரு எளிய வழி என்னவென்றால், தேவன் எந்தக் கடமையும் இல்லாமல், தனது மக்களுடன் உறவில் நுழைய முடிவு செய்கிறார்... மேலும், தேவன் தம்முடைய மக்கள் அனுபவிக்க பல ஆசீர்வாதங்களை கொடுப்பதில் தெய்வீக கருணை காட்டப்படுகிறது. ஆதாம் மற்றும் ஏவாளின் விஷயத்தில், முதல் உடன்படிக்கையில், தேவன் தான் படைத்த அனைத்தையும் அவர்களின் வசத்தில் கொடுத்ததில் தெய்வீக கருணை வெளிப்படுகிறது.
>
> – Dr. டேவிட் கொர்ரியா, மொழிபெயர்ப்பு

இரண்டாவது இடத்தில், ஆதாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு மனிதனின் நம்பகத்தன்மையும் தேவைப்பட்டது. ஆதாமும் ஏவாளும் தம்முடைய சாயலாக தம்மைச் சேவிக்கும்படி எண்ணியது மட்டுமில்லாமல், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் மூலம் தேவன் அவர்களின் நம்பகத்தன்மையை சோதித்தார். ஆதியாகமம் 2:16-17ல் தேவன் இவ்வாறு கட்டளையிட்டார்:

> நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் (ஆதியாகமம் 2:16-17).

ஆதாமும் ஏவாளும் இந்தச் சோதனையில் தேர்ச்சி பெறத் தவறிய பிறகும், அவர்களிடமும் அவர்களுக்கு அடுத்து வந்த உடனடி சந்ததியினரிடமும் மனித நம்பகத்தன்மையை தேவன் தொடர்ந்து எதிர்பார்த்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூன்றாவது இடத்தில், ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமைக்கான விளைவுகள் இருக்கிறது. தேவன் ஆதாமும் ஏவாளும் துரோகம் செய்து, தடைசெய்யப்பட்ட கனியைச் சாப்பிட்டால், அவருடைய சாபத்தின் விளைவுகளை அவர்கள் அனுபவிப்பார்கள் என்று வெளிப்படையாகக் கூறினார். ஆதியாகமம் 2:17இல் தேவன் இவ்வாறு அவர்களிடம் கூறினார்:

> அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் (ஆதியாகமம் 2:17).

மேலும் மறைமுகமாக, ஆதாமும் ஏவாளும் தேவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இந்தப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருந்தால், அவர்கள் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

தேவனுடன் வாழ்ந்த ஆதாமின் வாழ்க்கை, தேவனின் உடன்படிக்கையின் இயக்கவியல் அனைத்தையும் உள்ளடக்கியது. மேலும், ஆதியாகமம் புத்தகத்திலிருந்து நாம் அறிந்தபடி, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உண்மையாக இருந்தது ஆதாமுடன் தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்த தலைமுறைகளுக்கும் நாளுக்கு நாள் உண்மையாக இருந்தது. தேவனுடைய ராஜ விருப்பப்படி, வரலாற்றின் இந்தக் காலகட்டம் முழுவதும், தேவனுடனான வாழ்க்கை தெய்வீக இரக்கம், மனித விசுவாசம் மற்றும் விளைவுகளை உள்ளடக்கியதாக இருந்தது.

ஆதாமுடன் செய்யப்பட்ட உலகளாவிய உடன்படிக்கையுடன் சேர்த்து, நோவாவும் அவருடைய உடன்படிக்கையின் கீழ் உள்ள மற்றவர்களும் அதே மூன்று மடங்கு இயக்கவியலின் அடிப்படையில் தேவனுக்கு முன்பாக வாழ்ந்தனர்.

## நோவா

முதலாவதாக, நோவாவுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கான வழியை தேவனின் கருணை தயார் செய்தது. தேவன் தனது நீதியான தீர்ப்பில் மனித இனத்தை அழிக்க தீர்மானித்தபோது, அவர் நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்ற தீர்மானித்தார். ஆதியாகமம் 6:8 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதியாகமம் 6:8).

நோவாவுக்கும் அவருடைய குடும்பத்துக்கும் தேவன் அதிக இரக்கம் காட்டினார். நோவாவின் நாட்களைத் தாண்டியும் அவருடைய சந்ததியினருக்கும் இதேபோன்ற இரக்கம் பரவியது.

இரண்டாவதாக, நோவாவிடமிருந்து தேவன் நம்பகத்தன்மையை எதிர்பார்த்தார். பேழையைக் கட்டவும் விலங்குகளைக் கூட்டி சேர்க்கவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கட்டளையிட்டார். ஆதியாகமம் 6:18-19 யைப் பார்த்தால், அங்கு நோவாவுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை நோவாவின் பொறுப்புடன் நெருக்கமாக தொடர்புடையது. இங்கே நாம் இப்படி வாசிக்கிறோம்:

> ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீ பேழைக்குள் பிரவேசி... மேலும் சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக்கொள் (ஆதியாகமம் 6:18-19).

நோவா தனது குடும்பத்துடன் பேழைக்குள் நுழைவதன் மூலமும், விலங்குகளை உயிருடன் வைத்திருப்பதன் மூலமும் தனது தெய்வீக ராஜாவுக்கு நம்பிக்கைக்குரியவராக இருப்பதை காட்டுவதற்கு பொறுப்பானவராக இருந்தார். ஜலப்பிரளயத்திற்குப் பிறகும், ஆதியாகமம் 9:7 இல், தேவன் நோவாவையும் அவருடைய சந்ததியினரையும் தேவனுடைய சாயல்களான மனிதகுலத்தின் பங்கை நிறைவேற்ற அழைத்தார். மற்றவைகளின் மத்தியில் அவர் கூறியதாவது:

> நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விருத்தியாகுங்கள் (ஆதியாகமம் 9:7).

தேவன் நோவாவையும் பிற்கால தலைமுறையினரையும் அவருக்கு நம்பகமாக இருக்கும்படி தொடர்ந்து அழைத்தார்.

மூன்றாவதாக, நோவாவின் உடன்படிக்கையின் காலத்தில் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் மனித செயல்களுக்கு விளைவுகள் இருந்தன. நோவா தாமே தேவனுக்கு உண்மையாக இருந்தார். எனவே, வெள்ளத்திற்குப் பிறகு அவர் செய்த தியாகத்தில் தேவன் மகிழ்ச்சியடைந்தார் மற்றும் நிலையான உலகத்தைக் கொண்டு அவரை ஆசீர்வதித்தார். ஆதியாகமம் 8:20-21 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான். சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை (ஆதியாகமம் 8:20-21).

ஆனால் அவருக்கு எதிராக செய்யும் கலகம் சாபத்தின் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் தேவன் பெரு வெள்ளத்திற்குப் பிறகு தெளிவுபடுத்தினார். உதாரணமாக, ஆதியாகமம் 9:6-ல் தேவன் கொலைகாரர்கள் மீது வரப்போகும் சாபத்தைக் குறிப்பிட்டார்:

> மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ,
> அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது
> (ஆதியாகமம் 9:6).

ஆதியாகமத்தில் உள்ள பதிவுகள் பல வழிகளில் விளக்குவது போல, நோவாவின் உடன்படிக்கையின் காலப்பகுதியில் உடன்படிக்கை இயக்கவியல் முழு அளவில் ஒவ்வொரு நபரின் வாழ்க்கையிலும் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தியது.

இப்போது தேவன் செய்த உடன்படிக்கைகளின் இயக்கவியலானது, ஆதிகால உலகளாவிய உடன்படிக்கைகளின் போது இருந்த வாழ்க்கையை மட்டும் வகைப்படுத்தவில்லை. தேவன் இஸ்ரவேலுடன் செய்த ராஜ்ய உடன்படிக்கைகளின் போது அவர்கள் தேவனுக்கு முன்பாக வாழவேண்டிய வாழ்க்கை எப்படி இருக்கவேண்டுமென்று இந்த உடன்படிக்கைகள் வடிவமைத்தன.

## தேசிய உடன்படிக்கைகள்

ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையானது இஸ்ரவேல் தெரிந்துகொள்ளப்பட்டதையும் வாக்குதத்தத்தையும் வலியுறுத்தியது, மோசேயுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையானது நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதை முன்னிலைப்படுத்தியது, மற்றும் தாவீதுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை தாவீதின் நிரந்தர வம்சத்தை வலியுறுத்தியது. ஆனால் ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் போது இருந்த வாழ்க்கை இஸ்ரவேலின் தெரிந்துகொள்ளப்படுதல் மற்றும் வாக்குத்தத்தங்களை விட அவசியமானதாக இருந்தது. மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் காலம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதை விட அதிக ஈடுபாடு கொண்டதாக இருந்தது. தாவீதின் உடன்படிக்கையின் காலத்தில், தேவன் தனது மக்களுடன் தாவீதின் ராஜவம்சத்தை விட அதிகமாக தொடர்பு கொண்டார். முந்தைய உடன்படிக்கைகளைப் போலவே, ஒவ்வொரு ராஜ்ய உடன்படிக்கையும் தெய்வீக கருணை, மனித நம்பகத்தன்மை மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளால் வடிவமைக்கப்பட்டது.

மீண்டும் ஒருமுறை, இந்த ராஜ்ய உடன்படிக்கைகளை அவை தோன்றும் வரிசையில் பார்ப்போம்: முதலில், ஆபிரகாமுடனான உடன்படிக்கை; இரண்டாவது, மோசேயுடனான உடன்படிக்கை; மூன்றாவது, தாவீதுடனான உடன்படிக்கை. ஆபிரகாமின் உடன்படிக்கையிலிருந்து ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## ஆபிரகாம்

முதலில், தேவன் ஆபிரகாமுக்கு அதிக கருணை காட்டினார். உதாரணமாக, கானானுக்கு குடிபெயரும்படி ஆபிரகாமை முதன்முதலில் அழைத்தபோது தேவன் ஆபிரகாமுக்கு மிகுந்த இரக்கத்தைக் காட்டினார். தேவன் சொன்ன ஆதியாகமம் 12:2ஐக் கவனியுங்கள்:

> நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (ஆதியாகமம் 12:2).

ஆபிரகாமின் வாழ்நாள் முழுவதும், தேவன் முற்பிதாக்களுக்கு இரக்கம் காட்டினார். அவர் பாவத்தை மன்னித்து, அவரை நீதிமான் என்று எண்ணி, துன்பங்களிலிருந்து பாதுகாத்தார். தேவன் செய்த உடன்படிக்கையின் கீழ் ஆபிரகாமின் சந்ததியினரின் ஒவ்வொரு தலைமுறைக்கும் இதுவே உண்மையாக இருந்தது.

இரண்டாவதாக, தேவன் முற்பிதாக்களிடமிருந்தும் அவர்கள் நம்பகத்தன்மையுடன் இருக்கவேண்டுமென்று எதிர்பார்த்தார். உதாரணமாக, தேவனின் ஆரம்ப அழைப்பில் கூட, ஆபிரகாம் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. ஆதியாகமம் 12:1இல் நாம் வாசிக்கிறபடி, தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்:

> கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதியாகமம் 12:1).

ஆபிரகாம் தன் சொந்த நாட்டையும் குடும்பத்தையும் விட்டுவிட்டு, தான் பார்த்திராத இடத்திற்குச் செல்லும்படி தேவன் கட்டளையிட்டார். மேலும் ஆதியாகமம் 17:1-2ல், தேவன் ஆபிரகாம் தனது உடன்படிக்கையை இந்த வார்த்தைகளில் உறுதிப்படுத்தியபோது, நம்பகத்தன்மையின் அவசியத்தை நினைவுபடுத்தினார்:

> நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் (ஆதியாகமம் 17:1-2).

பல கிறிஸ்தவர்கள் அதைப் பார்க்கத் தவறினாலும், தேவனுடன் செய்யப்பட்ட ஆபிரகாமின் உடன்படிக்கை உறவு நம்பகத்தன்மையுடன் இருப்பதின் அவசியத்தை உள்ளடக்கியது. ஆபிரகாம் மற்றும் அவருடைய உடன்படிக்கையின் கீழ் அவருடைய சந்ததியினர் அனைவரிடமிருந்தும் தேவன் மீண்டும் மீண்டும் கீழ்ப்படிதலை எதிர்பார்த்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆபிரகாம் தேவனுடன் வைத்திருந்த உறவைப் பார்த்தால், அது தேவனின் சர்வாதிகாரத்தால் தொடங்கப்பட்ட ஒன்றாகும். ஆதியாகமம் 15 இல் உள்ள விலங்குகளைப் பிரிப்பதில் தேவன் தன்மேல் உடன்படிக்கையின் சாபங்களை எடுத்துக் கொண்டபோது அது முத்திரையிடப்பட்டது, ஆனால் அது எதுவும் ஆபிரகாம் இருந்த நிலைமையை அகற்றவில்லை. எனவே, தேவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது, தேவனின் கட்டளைகளுக்கு "உண்மையாக இருப்பது" என்று நாம் எளிதாக அழைக்கலாம். கர்த்தரை நம்புவதற்கான உண்மைநிலை, உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை அவர் நிர்வகிக்கும் வழிமுறையாகும்.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

மூன்றாவதாக, ஆபிரகாம் கீழ்ப்படிதலிலும், கீழ்படியாமல் இருப்பதிலும் விளைவுகள் இருப்பதையும் தேவன் தெளிவுபடுத்தினார். ஆதியாகமம் 17:1-2 யை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள். வசனம் 1 இல் தேவன் ஆபிரகாமிடம் கூறினார்:

> நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு (ஆதியாகமம் 17:1).

பின்னர் வசனம் 2 இல்:

> நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் (ஆதியாகமம் 17:2).

ஆபிரகாமின் சந்ததியினர் அதிகரிப்பது ஆபிரகாமின் கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதத்தின் விளைவாக இருக்கும் என்று தேவன் வெளிப்படையாகக் கூறினார். அதற்கேற்ப, நம்பகமற்ற தன்மை கடுமையான சாபங்களை விளைவிக்கும் என்றும் தேவன் கூறினார். இன்னும் ஒரு உதாரணமாக, ஆதியாகமம் 17:10-14ல் அவர் ஆபிரகாமிடம் கூறியதை கவனியுங்கள்:

> எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும்... நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம்பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால், அந்த ஆத்துமா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் (ஆதியாகமம் 17:10-14).

உடன்படிக்கை விசுவாசத்திற்கான அர்ப்பணிப்பின் அடையாளமாக விருத்தசேதனம் அவசியம் என்று தேவன் சொன்னார், அதனால் அவருடைய ஆண் சந்ததியினர் விருத்தசேதனம் செய்யப்படவில்லை என்றால், அவர்கள் அவருடைய ஜனங்களிலிருந்து துண்டிக்கப்படும் சாபத்தை அனுபவிப்பார்கள். உடன்படிக்கை வாழ்க்கையின் ஆசீர்வாதங்களிலிருந்து அவர்கள் விலக்கப்படுவார்கள்.

இந்த மூன்று உடன்படிக்கை இயக்கவியலும் தேவனுடனான ஆபிரகாமின் தனிப்பட்ட தொடர்புகளை வடிவமைத்தன, மேலும் அவை அவருக்குப் பிந்தைய மற்றவர்களின் வாழ்க்கையை தொடர்ந்து ஒழுங்குபடுத்தின.

தேவன் இஸ்ரவேலுடன் செய்த இரண்டாவது தேசிய உடன்படிக்கையானது சீனாய் மலையில் மோசேயுடன் செய்த உடன்படிக்கை ஆகும். நாம் பார்த்தபடி, இந்த உடன்படிக்கை தேவன் தந்த நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தியது. ஆனால் மற்ற உடன்படிக்கை இயக்கவியல் வாழ்க்கையில் உள்ளவைகள் மோசேயின் உடன்படிக்கையின் கீழ் விடுபட்டிருக்கின்றன என்று நினைப்பது ஒரு பயங்கரமான தவறாகும்.

## மோசே

அனைத்து உடன்படிக்கை இயக்கவியல்களும் மோசேயின் உடன்படிக்கையில் செயல்பட்டன என்பதைக் காண, இந்த உடன்படிக்கையின் மையப்பகுதியான பத்துக் கட்டளைகளை சுருக்கமாகப் பார்ப்போம். முதலாவதாக, தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு முந்தைய முன்னுரையில் தெய்வீக கருணை தெளிவாகத் தெரிகிறது. யாத்திராகமம் 20:2 இல் பத்துக் கட்டளைகள் இப்படித் தொடங்குகின்றன என்பது உங்களுக்கு நினைவு இருக்கும்.

> உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே (யாத்திராகமம் 20:2).

மோசேயுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையானது கிரியைகளின் உடன்படிக்கை அல்ல; அது தேவனின் கருணை மற்றும் கிருபையின் அடிப்படையில் நிறுவப்பட்டது. மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் காலம் முழுவதும் தேவன் இஸ்ரவேலின் தலைமுறையினருக்கு இது போன்ற கருணையை தொடர்ந்து காட்டினார். அப்படியிருந்தும், தேவன் தம்முடைய மக்களிடமிருந்து உண்மைத்தன்மையைக் எதிர்பார்த்தார் என்பதை பத்துக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கட்டளைகள் தெளிவாகக் கூறுகின்றன. முதல் கட்டளை யாத்திராகமம் 20:3 இல் கூறுகிறது:

> என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம் (யாத்திராகமம் 20:3).

தெய்வீக கிருபையானது மனித நம்பகத்தன்மைக்கு முரணானது அல்ல. மாறாக, அது ஆதரவளித்து, இஸ்ரவேலின் நம்பகத்தன்மைக்கு நன்றியுடன் பதிலளிக்க வழிவகுத்தது.

> தேவன் தம் ஜனங்களுக்கு ஏதேனும் பிரமாணத்தை கொடுப்பதற்கு முன், தேவன் தம்முடைய கிருபையை அவர்களுக்கு நினைவூட்டுகிறார் - ”அடிமை வீடாகிய எகிப்திலிருந்து உங்களை புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே.” அது என்னவென்றால், மீதமுள்ள பத்து கட்டளைகளை அது அமைக்கிறது, தேவனின் மக்களாக மாறுவதற்கான சட்டங்களாக அவை இல்லை, ஆனால் தேவனின் மக்களுக்கு ஒரு நெறிமுறையை அல்லது வாழ்க்கை முறையை அது கொடுக்கிறது, அது ஜனங்களை தேவனின் கிருபைக்கு பொறுப்புடையவர்களாக இருக்கவைக்கிறது. முதல் கட்டளைகளில் நாம், முக்கியமாக, நீங்கள் தேவனை எப்படி நேசிக்கிறீர்கள்? கர்த்தருக்கு முன்பாக வேறு தெய்வங்கள் இல்லாமல், தேவனின் உருவங்களையோ அல்லது ரூபங்களையோ உருவாக்காமல், கர்த்தரின் நாமத்தை வீணாக எடுத்துக் கொள்ளாமல், தேவனை நேசிக்கிறீர்கள்... பின்னர் பத்து கட்டளைகளின் இரண்டாம் பாதி, “உன் தாகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக” என்பது, நாம் மற்ற மக்களுடன் தொடர்புகொள்வதற்கான தரநிலைகளை வழங்கும் சட்டங்களின் வரிசையை காட்டுகிறது. ஏனென்றால், இது வேதத்தின் தேவனுடனான ஒரு தனிப்பட்ட ஆவிக்குரிய நிலை மட்டுமல்ல; இதில் ஒரு வகுப்புவாத கருத்து உள்ளது. தேவனை நேசிப்பது மட்டும் போதாது. இது முக்கியமான பகுதி, ஆனால் அது நாம் வாழ்வதிலும் மற்றவர்களை நேசிக்கும் விதத்திலும் வெளிப்படுத்தப்பட வேண்டும், அது பத்து கட்டளைகளின் இரண்டாம் பகுதியாகும்.
>
> – Dr. பிரையன் டி. ரஸ்ஸல்

இதையும் தாண்டி, கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகளைப் பற்றியும் பத்துக் கட்டளைகள் பேசுகின்றன. யாத்திராகமம் 20:4-6 இல் நாம் வாசிக்கிறோம்:

> மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் (யாத்திராகமம் 20:4-6).

இப்போது ஆபிரகாம் மற்றும் மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கைகளின் இயக்கவியலைப் பார்த்தோம், பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலுடன் செய்யப்பட்ட கடைசி தேசிய உடன்படிக்கையையான தாவீதுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையைப் பார்ப்போம். இஸ்ரவேலை ஆளும் நிரந்தர வம்சமாக தேவன் தாவீதின் வம்சத்தை ஏற்படுத்துவார் என்பதை இந்த உடன்படிக்கை வலியுறுத்தியது.

## தாவீது

நிச்சயமாக, தாவீது மற்றும் அவரது சந்ததியினரின் வாழ்க்கையின் பெரிய பதிவை நாம் பார்க்கும்போது, இந்த உடன்படிக்கையின் வாழ்க்கை தெய்வீக கருணை, மனித விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமைக்கான விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பது தெளிவாகிறது. உதாரணமாக, தாவீதுக்கு தேவன் செய்த கருணையைப் பற்றி சங்கீதம் 89:3-4 கூறுவதைக் கவனியுங்கள்:

> "என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைபண்ணி, என் தாசனாகிய தாவீதை நோக்கி: என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன்" என்று ஆணையிட்டேன் (சங்கீதம் 89:3-4).

தாவீதையும் அவனுடைய சந்ததியினரையும் இஸ்ரவேலின் சரியான ராஜாக்களாக தேர்ந்தெடுத்து நிலைநிறுத்துவதன் மூலம் தேவன் தாவீதுக்குக் காட்டிய கருணையை இந்த வசனங்கள் பிரதிபலிக்கின்றன. ஆனால் தேவன் நம்பகத்தன்மையையும் எதிர்பார்த்தார். மேலும் இந்த உடன்படிக்கையில்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கீழ்ப்படியாமையினால் ஏற்படும் சாபங்களின் விளைவுகளைச் சொல்லி பயமுறுத்தினார். சங்கீதம் 89:30-32 யை கவனியுங்கள்:

> அவன் பிள்ளைகள் என் நியாயங்களின்படி நடவாமல், என் வேதத்தை விட்டு விலகி; என் நியமங்களை மீறிநடந்தால்.... அவர்கள் மீறுதலை மிலாற்றினாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பேன் (சங்கீதம் 89:30-32).

நாம் இங்கு பார்க்கிறபடி, தாவீதின் குமாரர்கள் தேவனுடைய பிரமாணங்களை விட்டுவிட்டால், அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள். ஆனால் எண்ணற்ற வேத பகுதிகள் நமக்குச் சொல்வது போல, தாவீதுக்கும் அவனுடைய சந்ததியினருக்கும் அவர்கள் தேவனுக்கு உண்மையாக இருந்தால் பெரும் ஆசீர்வாதங்கள் கிடைக்கும். நிச்சயமாக, தாவீதின் குடும்பத்தின் மீதான ஆசீர்வாதங்களும் சாபங்களும் இந்தக் காலத்திலிருந்து தேவனுடைய மக்கள் அனைவரின் வாழ்க்கையையும் பாதித்தன.

உலகளாவிய மற்றும் தேசிய உடன்படிக்கைகளில் உள்ள வாழ்க்கையின் இயக்கவியலை மனதில் கொண்டு, நிறைவேறுதலின் உடன்படிக்கையாகிய புதிய உடன்படிக்கைக்குத் திரும்ப நாம் தயாராக இருக்கிறோம்.

## புது உடன்படிக்கை

பழைய ஏற்பாட்டு வரலாறு முழுவதும் ஒரு உடன்படிக்கையை மற்றொன்றின் மேல் கட்டியெழுப்புவதன் மூலம் தேவன் தனது ராஜ்யமானது முன்னோக்கி நகர்வதை நிர்வகித்தார். ஆனால் நாம் அறிந்தபடி, இயேசு பூமிக்கு வந்த சமயத்தில், இஸ்ரவேலர் தேவனுக்கு எதிராக மிகவும் வெளிப்படையாகக் கலகம் செய்திருந்தார்கள், அதனால் அவர் தனது ஜனங்கள் மீது கடுமையான சாபங்களைக் கொட்டினார். மீதியான இஸ்ரவேலர்கள் மட்டுமே உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் புதிய உடன்படிக்கையில், தேவனுடைய ராஜ்யமானது அதன் நிறைவேற்றத்தை அடைகிறது. மேலும் தேவனுடைய ராஜ்யமானது கிறிஸ்துவின் அரசாட்சியின் மூலம் பூமியின் எல்லைகள் மட்டும் பரவியது. இந்த அர்த்தத்தில், புது உடன்படிக்கை தேவன் கடந்த காலத்தில் செய்ததை எதிர்க்கவில்லை. மாறாக, சரித்திரம் முழுவதிலும் அவருடைய ராஜ்யத்திற்காக அவர் எதை நோக்கமாகக் கொண்டிருந்தாரோ அதை அது நிறைவேற்றுகிறது. எனவே, தேவனுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் மூன்று மடங்கு இயக்கவியல் புதிய உடன்படிக்கையின் சிறப்பியல்பு என்பதைக் கண்டுபிடிப்பது நம்மை ஆச்சரியப்படுத்தாது.

முதலாவதாக, புதிய உடன்படிக்கை தெய்வீக கருணையை உள்ளடக்கியது. புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்தபோது, சிறைபட்டுப்போன



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தம்முடைய ஜனங்களுக்கு மிகுந்த இரக்கம் காட்டுவதாக தேவன் வாக்குத்தங்களை அளித்தார். எரேமியா 31:34 பின்வருமாறு சொல்லுகிறது:

> நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரேமியா 31:34).

இந்த வழியிலும் மற்றும் பல வழிகளிலும், புது உடன்படிக்கை தேவனின் கனிவான இரக்கத்தை தெளிவாகக் காட்டுகிறது.

அதே நேரம், புதிய உடன்படிக்கையில் மனித நம்பகத்தன்மையும் ஒரு காரணியாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிரமாணங்களை நீக்கிவிடுவதாக வாக்களிக்கவில்லை, மேலும் அவற்றிற்குக் கீழ்ப்படிவதிலிருந்து அவர் யாருக்கும் விலக்கு அளிக்கவில்லை. மாறாக, அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க அவர் உதவுகிறார். உண்மையில், எரேமியா 31:33 இல் தேவன் வாக்குத்தத்தம் அளித்தார்:

> நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன் (எரேமியா 31:33).

புதிய உடன்படிக்கையின் காலத்தில், தேவன் தம்முடைய பிரமாணத்தின் மீது பிரியம் உண்டாகச்செய்வார், அதனால் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிவார்கள்.

இறுதியாக, ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளும் புதிய உடன்படிக்கையில் தெளிவாகத் தெரிகின்றன. எரேமியா 31:33 தொடர்ந்து இவ்வாறு கூறுகிறது:

> நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எரேமியா 31:33).

தேவன் தம்முடைய உடன்படிக்கையின் கடமைகளைக் கடைப்பிடிக்க அவர்களுக்கு உதவுவதால், தேவன் தம் மக்களுக்குப் பெரும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவார் என்ற உறுதியை இந்தப் பிரகடனம் தெளிவாக கொடுக்கிறது. அதே வேளையில் இந்தக் கடமைகளைக் கடைப்பிடிக்காத எவரும் இந்த ஆசீர்வாதத்தைப் பெறமாட்டார்கள்.

> புதிய உடன்படிக்கையை பழைய உடன்படிக்கையிலிருந்து வேறுபடுத்துவது எதுவென்றால், அதைக் கடைப்பிடிக்கும் மக்களின் திறமையாகும். எரேமியா 31 இல், தேவன் அவர்களின் இருதயங்களில் பிரமாணத்தை எழுதுவார் என்று கூறுகிறார், அவர் தனது பிரமாணத்தை அவர்கள் மத்தியில் வைப்பார், பின்னர் அவர் உடன்படிக்கை சூத்திரத்துடன் இதைப் பின்பற்றுகிறார் - "நான் உங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனாக இருப்பேன், நீங்கள் என் ஜனங்களாகவும் இருப்பீர்கள்.” தேவன் தம்முடைய மக்களின் இருதயங்களில் பிரமாணங்களை எப்படி எழுதப் போகிறார் என்பதைப் புரிந்து கொள்ள, எசேக்கியேலில் இதே போன்ற ஒரு பகுதிக்குச் செல்வது மிகவும் உதவியாக இருக்கும். எசேக்கியேல் 36 இல், தேவன் தம்முடைய பிரமாணங்களை அவர்கள் நடுவில் வைப்பார் என்று கூறவில்லை, மாறாக அவர்கள் மத்தியில் தம் ஆவியை வைப்பார் என்று கூறுகிறார். அவர்களுடைய இருதயங்களில் நியாயப்பிரமாணத்தை எழுதுவேன் என்று அவர் சொல்லவில்லை, மாறாக, “அவர்கள் என் நியமங்களுக்குக் கீழ்ப்படியவும் என் விதிகளைப் பின்பற்றவும் நான் அவர்களைச் செய்வேன்” என்று கூறுகிறார். பின்னர், அவர் எரேமியா 31 இல் கூறுவது போல், அவர் உடன்படிக்கை சூத்திரத்துடன் இதை மீண்டும் பின்பற்றுகிறார் - ”நான் அவர்களின் தேவனாக இருப்பேன், அவர்கள் என் ஜனமாக இருப்பார்கள்.” எனவே, இந்த தீர்க்கதரிசன புத்தகங்களை ஒன்றாகப் பார்க்கும்போது, தேவன் தம்முடைய ஜனங்களின் இருதயங்களில் பிரமாணத்தை எழுதும் விதம் அவருடைய ஆவியை அவர்கள் மத்தியில் வைப்பதன் மூலம் இருப்பதைக் காண்கிறோம். தேவனின் ஜனங்களில் வாசமாயிருப்பதன் மூலம், புதிய உடன்படிக்கை சகாப்தத்தில் தம்முடைய பிரமாணத்திற்கு மக்களை கீழ்படிய வைப்பார். எனவே, புதிய உடன்படிக்கையில், அது நமது நம்பகத்தன்மையினால் அல்ல, மாறாக நம் மத்தியில் வாழ்ந்து செயல்படும் தேவனின் ஆவியின் செயல்பாட்டின் காரணமாகவே இது பாதுகாப்பாக இருக்கிறது.

– Dr. மேத்யூ நியூகிர்க்

இப்போது, புதிய உடன்படிக்கை கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தின் இறுதிக் கட்டத்தின் மாதிரியைப் பின்பற்றி மூன்று நிலைகளில் நடைமுறைக்கு வருகிறது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் முதல் வருகையிலும் அவருடைய அப்போஸ்தலர்களின் கிரியைகளிலும் புதிய உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்டது. சபையின் வரலாறு முழுவதும், புதிய உடன்படிக்கையானது சபையில் கிரியை செய்யும் கிறிஸ்துவின் வல்லமையின் மூலம் தொடர்ந்து பலனளிக்கிறது. யுகத்தின் முடிவில் கிறிஸ்து மகிமையுடன் திரும்பும்போது புதிய உடன்படிக்கை அதன் நிறைவை அடையும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முதலாவதாக, பிதா தம்முடைய குமாரனை உலகுக்கு அனுப்பியபோது புதிய உடன்படிக்கை தெய்வீக அருளால் ஆரம்பிக்கப்பட்டது என்பதை புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. மனித நம்பகத்தன்மையின் தேவைக்கும் கிறிஸ்து தாமே உண்மையுள்ளவராக இருந்தார் என்பதை சிலுவையில் அவர் அடைந்த மரணம் வரை கூட அது வலியுறுத்துகிறது. மேலும் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும் ஆசீர்வாதத்தைப் பெற்றார் என்பதையும் அது வலியுறுத்துகிறது. இதன் விளைவாக, கிறிஸ்துவில் இரட்சிப்பிற்கேற்ற விசுவாசம் கொண்ட அனைவரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். எபிரெயரின் எழுத்தாளர் எபிரெயர் 9:12-15 இல் கூறியது போல்:

> [கிறிஸ்து] வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்... எனவே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபிரெயர் 9:12 -15)

தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு விவரத்தையும் கடைப்பிடிக்கவும், பாவத்திற்காக தன்னை ஒரு பரிபூரணமான மற்றும் முழுமையான பலியாக அளிக்கவும் தனது குமாரனை அனுப்புவதன் மூலம் புதிய உடன்படிக்கையை நிறுவுவதற்கு தேவன் வரலாற்றில் தலையிட்டார். மேலும் அவருடைய தியாகம் அவரை விசுவாசிக்கும் அனைவருக்கும் நித்திய மன்னிப்பைக் கொண்டுவருகிறது.

> பழைய ஏற்பாட்டைப் போலல்லாமல், இது ஒரு அற்புதமான கிறிஸ்தவக் கோட்பாடாகும். மத்தியஸ்தர்கள், ஆசாரியர்கள், பாவ மன்னிப்புக்காக ஆண்டுதோறும் காளைகளையும் ஆடுகளையும் பலி கொடுக்க வேண்டியிருந்தது, இயேசு மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஒருமுறை நுழைந்தார் என்று வேதம் நமக்குச் சொல்கிறது. அவர் சிலுவையில் மரித்தபோது, நம்முடைய பாவங்களுக்காகத் தம் இரத்தத்தைச் சிந்தியபோது, நாம் கர்த்தரிடம் செல்வதற்கான வழியை அவரது இரத்தத்தினால் அவர் உருவாக்கினார் என்பது தான் இதன் அர்த்தம்.
>
> – Dr. உயானி சிண்டோ

கிறிஸ்துவின் முதல் வருகையில் அவருடைய இரட்சிப்புக்கடுத்த கிரியையின் முக்கியத்துவம் இருந்தபோதிலும், புதிய உடன்படிக்கையின் மாபெரும் இரட்சிப்பானது புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து தம் வேலையைத் தொடர்வதையும் சார்ந்துள்ளது. நாளுக்கு நாள் கிறிஸ்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரலோகத்திலுள்ள தம்முடைய பிதாவின் சிங்காசனத்திற்கு முன்பாகத் தம்முடைய ஜனங்களுக்காகப் பரிந்து பேசுகிறார். எபிரெயர் 7:24-25 இல், எபிரெய எழுத்தாளர் இந்த வார்த்தைகளை எழுதியபோது இந்த யதார்த்தத்தை சுட்டிக்காட்டினார்:

> [இயேசு] என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரெயர் 7:24-25).

தேவனின் கருணையினிமித்தமாக, கிறிஸ்து ஆட்சி செய்கிறார் மற்றும் நம் சார்பாக பரிந்து பேசுகிறார். அவர் நம்முடைய தோல்விகளை சரிப்படுத்தி நம்முடைய நித்திய ஆசீர்வாதங்களை உறுதிப்படுத்துகிறார்.

இறுதியாக, கிறிஸ்து நம் பாவங்களுக்காக கிரயம் செலுத்தி, நம் சார்பாக தொடர்ந்து பரிந்து பேசுவதால், கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தின் முழுநிறைவு ஒரு நாள் வரும் என்று நாம் உறுதியாக இருக்க முடியும். அந்த நாள் வரும்போது, எப்போதும் இல்லாத அளவுக்கு கர்த்தரின் கிருபையைப் பார்ப்போம். எபிரெயர் நிருபத்தை எழுதியவர் எபிரெயர் 9:28 இல் இவ்வாறு விளக்குகிறார்:

> கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபிரெயர் 9:28).

அந்த நாள் வரும்போது, கிறிஸ்துவை விசுவாசித்த ஒவ்வொரு நபரும் தேவனின் சித்தத்திற்கு முற்றிலும் உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள், மேலும் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் நித்திய ஜீவனின் ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

> நம்முடைய கர்த்தரின் கிரியைகளைப் பற்றி நாம் நினைக்கும் போது, நாம் அடிக்கடி அதை முதல் வருகை மற்றும் இரண்டாவது வருகையின் அடிப்படையில் நினைக்கிறோம். அவர், வாழ்ந்து, இறந்து, உயர்த்தெழுந்த முதல் வருகையில் இந்த உலகத்திற்கு ராஜ்யத்தை கொண்டு வந்தார். அவர் புதிய உடன்படிக்கை சகாப்தத்தை கொண்டு வந்தார். அவர் பாவ மன்னிப்பைக் கொண்டுவந்தார். அவர் பாவத்தை தோற்கடித்தார், மரணத்தை தோற்கடித்தார்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பொல்லாங்கனை தோற்கடித்தார்… அவர் மீண்டும் வரும்போது, அவர் பாவத்தையும் மரணத்தையும் பிசாசையும் முழுவதுமாக தனது காலடியில் வைப்பார், இதனால் தீமை அழிக்கப்படும், புத்தகங்கள் சமநிலையில் இருக்கும், இறுதி தீர்ப்பு நடக்கும், ஒரு பொது வழியில், பாவம் மற்றும் மரணம் கையாளப்படும் இடத்தில், அவருடைவர்களல்லாதவர்கள் என்றென்றும் ஆக்கினையில் தள்ளப்படுவார்கள். அவருடையவர்கள் புதிய வானம் மற்றும் புதிய பூமியின் பலனையும் நன்மையையும் அனுபவிப்பார்கள், பின்னர் எல்லாவற்றையும் அதன் முடிவுக்கு கொண்டுவருவதை நாம் காண்போம்.
>
> – Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

இப்போது நாம் தேவனின் ராஜ்யம் மற்றும் அவருடைய உடன்படிக்கைகள், அவருடைய உடன்படிக்கைகளின் வரலாறு மற்றும் தேவனின் உடன்படிக்கைகளின் அடிப்படை இயக்கவியல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டுள்ளோம், நாம் நமது அடுத்து பார்க்கப்போகும் இறுதி தலைப்பு: தேவனுடைய உடன்படிக்கைகளின் மக்கள்.

# உடன்படிக்கைகளின் மக்கள்

தேவன் தனது ராஜ்யத்தை உடன்படிக்கைகள் மூலம் நிர்வகித்ததால், அவர் எப்போதும் மக்களுடன் ஈடுபட்டார். இது நமக்கு ஒரு ஆச்சரியமாக இருக்கக்கூடாது. மனிதர்கள் தேவனின் அரச, ஆசாரிய ரூபங்களாக பூமி முழுவதும் தனது ராஜ்யத்தை பரப்புவதற்காக உருவாக்கினார். ஆனால் உண்மையில், தேவனின் உடன்படிக்கைகளானது வெவ்வேறு நேரங்களில் பல்வேறு வகையான மக்கள் சம்பந்தப்பட்டவை. வேதாகமத்தில் இந்த வகை எவ்வாறு காணப்படுகிறது? தேவனுடைய உடன்படிக்கையின் மக்களை நாம் கருத்தில் கொள்ளும்போது அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது?

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க, நாம் இரண்டு சிக்கல்களைப் பார்க்க வேண்டும். முதலில், தேவனின் உடன்படிக்கைகள் மனிதகுலத்தின் வெவ்வேறு பிரிவுகளை பல்வேறு வழிகளில் எவ்வாறு ஈடுபடுத்துகின்றன என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, தேவனின் உடன்படிக்கைகளின் மக்களுக்கான உடன்படிக்கை இயக்கவியலின் பயன்பாட்டை இந்தப் பிரிவுகள் எவ்வாறு பாதித்தன என்பதைப் பார்ப்போம். மனித இனத்தின் பல்வேறு பிரிவுகளுடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் எவ்வாறு உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார் என்பதை முதலில் பார்ப்போம்.

## மனிதகுலத்தின் பிரிவுகள்

இது ஆண்கள் மற்றும் பெண்கள், வயதானவர்கள் மற்றும் இளைஞர்கள், பலம் வாய்ந்தவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் என்று பல்வேறு வகையான தனிநபர்கள் மற்றும் மக்கள் குழுக்களுக்கு இடையில் உள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுகிறது என்று பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்த அனைவருக்கும் தெரியும். இப்போது நிச்சயமாக, இந்த வகையான அனைத்தையும் விரிவாகக் கையாள்வது சாத்தியமில்லை. ஆனால், தெய்வீக உடன்படிக்கைகளைப் பற்றி வேதம் நமக்குச் சொல்வதில் பெரும்பாலும் முக்கிய இடத்தைப் பிடித்த பல பெரிய குழுக்களின் மீது கவனம் செலுத்த இது உதவும்.

விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் இருவரும் தேவனின் உடன்படிக்கைகளுக்குள் எவ்வாறு சேர்க்கப்படுகிறார்கள் என்பதைக் கவனிப்பதன் மூலம் மனிதகுலத்தின் இந்த பிரிவுகளை முதலில் பார்ப்போம். தேவனின் உடன்படிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கும் அதிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் இடையிலான பிரிவை நாம் பார்ப்போம். தேவனின் உடன்படிக்கைகளுக்குள் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் இருவரும் இருக்கிறார்கள் என்பதில் இருந்து ஆரம்பிக்கலாம்.

### உடன்படிக்கைகளுக்குள்ளானவர்கள்

கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் உண்மையான விசுவாசிகள் மட்டுமே தேவனுடன் உடன்படிக்கையில் நுழைந்துள்ளனர் என்று கருதுகின்றனர், ஆனால் இது அரிதாகவே பேசப்படுகிறது. ஆதாம் மற்றும் நோவாவுடன் செய்யப்பட்ட தேவனின் உடன்படிக்கைகளை உலகளாவிய உடன்படிக்கைகள் என்று நாம் பேசினோம், ஏனென்றால் அவை எல்லா மக்களையும் தேவனுடன் பிணைத்தன. மனிதகுலம் பாவத்தில் விழுந்ததைக் குறித்து நாம் பேசும் போது நாம் இதில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் அடங்குவர். ஆதாமின் உடன்படிக்கையில் நிறுவப்பட்ட தேவனுடைய ராஜ்யத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், ஆபேல் மற்றும் சேத் போன்ற இரட்சிப்பிற்கேற்ற விசுவாசம் உள்ளவர்களுக்கும், காயீன் மற்றும் அவனது கொலைகார சந்ததியான லாமேக்கைப் போல இல்லாதவர்களுக்கும் பொருந்தும். ஏறக்குறைய அதே வழியில், நோவாவின் நாட்களில் இயற்கையில் ஸ்திரத்தன்மைக்கான உடன்படிக்கை நோவாவின் குமாரன் சேம் போன்ற விசுவாசிகளையும், நோவாவின் பேரன் கானானைப் போன்ற அவிசுவாசிகளையும் உள்ளடக்கியிருந்தது.

ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோருடன் செய்யப்பட்ட இஸ்ரவேலின் தேசிய உடன்படிக்கைகளுக்கும் இது பொருந்தும். நித்திய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரட்சிப்பைப் பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும், இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும் இந்த உடன்படிக்கைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கையில் இருந்தார்கள். உதாரணமாக, யாக்கோபு மற்றும் ஏசா இருவரும் விருத்தசேதனம் செய்து, ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்தார்கள். மோசே வாழ்ந்த நாளில் இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரமும் சீனாய் மலையில் உடன்படிக்கை செய்துகொண்டபோது அவர்களுக்குள் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் இருந்தனர். தாவீதுடனான தேவனின் வம்ச உடன்படிக்கைக்கும் இதுவே உண்மை. தாவீதின் சந்ததியினர் மற்றும் இஸ்ரவேல் குடிமக்கள் அனைவரும் உண்மையான விசுவாசிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் தேவனுடன் உடன்படிக்கைக்குட்பட்டிருந்தனர்.

இப்போது புதிய உடன்படிக்கைக்குள் அவிசுவாசிகள் வரும்போது நாம் கவனமாக இருக்க வேண்டும். புதிய உடன்படிக்கையைப் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் உண்மையான விசுவாசிகளை மட்டுமே உள்ளடக்கும் என்பதைக் குறிக்கிறது. எரேமியா 31:34 இல் புதிய உடன்படிக்கையின் மக்களை எரேமியா விவரித்த விதத்தைக் கவனியுங்கள்:

> இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரேமியா 31:34).

இந்த வேத பகுதிகள் வெளிப்படுத்துவது போல, புதிய உடன்படிக்கையில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு நபரும் கர்த்தரை அறிவார்கள் மற்றும் நிரந்தரமாக தங்கள் பாவங்களிலிருந்து மன்னிக்கப்படுவார்கள். அவர்களுடைய மீறல்கள் எதுவும் அவர்களுக்கு எதிராக எண்ணப்படுவதில்லை.

இருப்பினும், எரேமியாவின் தீர்க்கதரிசனம் எவ்வாறு நிறைவேறியது என்பதைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, இந்தத் தொடரில் நாம் பலமுறை குறிப்பிட்டுள்ள புதிய உடன்படிக்கை யுகத்தின் ஒரு அம்சத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கை மூன்று நிலைகளில் நிறைவேற்றப்படுகிறது என்று புதிய ஏற்பாடு விளக்குகிறது. இது கிறிஸ்துவின் முதல் வருகையில் துவக்கப்பட்டது; இது சபை வரலாறு முழுவதும் தொடர்கிறது; கிறிஸ்து மகிமையுடன் திரும்பும்போது மட்டுமே அது அதன் முழுமையை அடையும்.

புதிய உடன்படிக்கை யுகத்தை மூன்று நிலைகளில் விரிவுபடுத்துவது, கிறிஸ்து திரும்பி வரும் வரை, விசுவாசிகளும் அவிசுவாசிகளும் தேவனின் மக்களிடையே கணக்கிடப்படுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவருடைய ராஜ்யம் துவங்கியபோது கிறிஸ்துவை பின்பற்றுபவர்களில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் இருந்தார்கள். கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சி முழுவதும் இதுவே உண்மையாக இருக்கிறது. காணக்கூடிய கிறிஸ்தவ சபையில் நித்திய இரட்சிப்பைப் பெற்ற உண்மையான விசுவாசிகளும், கிறிஸ்து மற்றும் அவருடைய சபையின் தொடர்புகளிலிருந்து தற்காலிக ஆசீர்வாதங்களைப் பெறும் அவிசுவாசிகளும் இருப்பார்கள்.

> காணக்கூடிய சபை என்றால் என்ன? பல உள்ளூர் சபைகள், பல மதப்பிரிவுகளும் தங்களைப் பிரிவினராக நினைக்காத சில சபைகளையும் உள்ளடக்கிய உலகெங்கிலும் உள்ள சபையின் அர்த்தத்தில் இது உலகளாவிய சபை ஆகும்... இது கண்ணுக்கு தெரியாத சபையிலிருந்து இறையியலில் வேறுபடுகிறது. மேலும் கண்ணுக்குத் தெரியாத சபை என்பது நீங்கள் பார்க்கக்கூடிய சபை மட்டுமல்ல, நீங்கள் பார்க்க முடியாத சபையாகும். எபிரெயர் 12, முதற்பேறான சபையின் பொது கூடுகை **என்**பது மரித்து பரலோகத்துக்குப் போனவர்களையும் தேவதூதர்கள் மற்றும் பிரதான தூதர்களின் சகவாசத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இப்பொழுது இருக்கிற தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் குறிக்கிறது. கண்ணுக்குத் தெரியாத சபையும் காணக்கூடிய சபையும் இயேசு கிறிஸ்துவின் சபையை உருவாக்குகின்றன.
>
> – Dr. டெரெக் தாமஸ்

1 யோவான் 2:19ல் சபையில் அவிசுவாசிகளைப் பற்றி அப்போஸ்தலனாகிய யோவான் பேசிய விதத்தை கவனியுங்கள்:

> அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே. எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள் (1 யோவான் 2:19).

கிறிஸ்தவ நம்பிக்கையை விட்டு வெளியேறும் மக்களைப் பற்றி இங்கே அப்போஸ்தலன் எழுதினார். ஒரு வகையில், அவர்கள் "நம்முடையவர்கள்" என்று எண்ணப்பட்டதை அவர் ஒப்புக்கொண்டார். அதாவது, அவர்கள் தேவ ஜனங்களிடையே வாழ்ந்தார்கள். ஆனால், விசுவாசத்தை விட்டு வெளியேறியதன் மூலம், அவர்கள் "நம்மைச் சேர்ந்தவர்கள் அல்ல" என்பதைத் தெளிவாக்கினார்கள் என்றும் யோவான் கூறினார். அதாவது அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உண்மையான விசுவாசிகளாக இருக்கவில்லை. அவர் கூறியது போல், அவர்கள் உண்மையில் கிறிஸ்துவில் நித்திய இரட்சிப்பைப் பெற்ற உண்மையான விசுவாசிகளாக இருந்திருந்தால், "அவர்கள் எங்களுடன் தொடர்ந்திருப்பார்கள்." அதாவது இறுதிவரை உண்மையாக இருந்திருப்பார்கள்.

பெரும்பாலான சபைகளின் பட்டியலில் உண்மையான விசுவாசிகள் மற்றும் விசுவாசிகள் இல்லாதவர்கள் உள்ளனர் என்பதை நாம் அனைவரும் அறிவோம். புதிய உடன்படிக்கையின் முற்றிலும் மீட்கப்பட்ட மக்களைப் பற்றிய எரேமியாவின் தீர்க்கதரிசனம் கிறிஸ்து திரும்பி வரும்போது மட்டுமே நிறைவேறும். அந்த நேரத்தில், தேவனின் உடன்படிக்கை மக்களில் அவிசுவாசிகள் தேவனின் நித்திய நியாயத்தீர்ப்பை அனுபவிப்பார்கள். உண்மையான விசுவாசிகள் மட்டுமே புதிய சிருஷ்டிப்பில் கிறிஸ்துவுடன் ஆட்சி செய்வார்கள்.

தெய்வீக உடன்படிக்கைகளுக்குள் மனிதகுலத்தின் பிரிவுகளுக்கு கூடுதலாக, பழைய ஏற்பாட்டில் தேவனின் உடன்படிக்கைகள் பற்றிய பதிவு, வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் தேவனின் உடன்படிக்கைகளில் இருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் உள்ளே சேர்க்கப்பட்டவர்களுக்கும் இடையிலான பிரிவைக் குறிக்கிறது.

## சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் விலக்கப்பட்டவர்கள்

நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, ஆதாம் மற்றும் நோவாவுடன் செய்யப்பட்ட உலகளாவிய உடன்படிக்கைகளில் மனிதகுலம் அனைத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கைகளில் நிறுவப்பட்ட அஸ்திபாரங்கள் மற்றும் இயற்கையான ஸ்திரத்தன்மை ஆகியவற்றிலிருந்து எந்த குழுக்களும் விலக்கப்படவில்லை. ஆனால் தேவன் இஸ்ரவேலைத் தம்முடைய விசேஷ உடன்படிக்கை ஜனங்களாகத் தேர்ந்தெடுத்தபோது இந்த நிலை மாறியது. ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோருடன் செய்யப்பட்ட தேசிய உடன்படிக்கைகளில் பிரதானமாக ஆபிரகாமின் சரீரப்பிரகாரமான சந்ததியினரும் இஸ்ரவேலில் தத்தெடுக்கப்பட்ட சில புறஜாதிகளும் மட்டுமே இருப்பார்கள். பெரும்பாலும், புறஜாதி நாடுகள் இஸ்ரவேலின் ராஜ்ய உடன்படிக்கைகளிலிருந்து விலக்கப்பட்டன. எபேசியர் 2:12 யையும் கிறிஸ்துவைப் பின்பற்றும் முன் புறஜாதிகளை பவுல் விவரித்த விதத்தையும் கவனியுங்கள்:

> அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாக இருந்தீர்கள் (எபேசியர் 2:12).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புறஜாதிகள் வாக்குத்தங்களின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்களாக இருந்தார்கள். அவர்கள் விசுவாசம் இல்லாமலும், தேவன் இல்லாமலும் இருந்தார்கள். எனவே, இஸ்ரவேலின் ராஜ்ய உடன்படிக்கைகளின் நூற்றாண்டுகளில், உலகில் உண்மையில் மூன்று வகையான மக்கள் தான் இருந்தார்கள்: இஸ்ரவேலின் உடன்படிக்கைகளில் இருந்த உண்மையான விசுவாசிகள், இஸ்ரவேலின் உடன்படிக்கைகளில் இருந்த அவிசுவாசிகள் மற்றும் இஸ்ரவேலின் உடன்படிக்கைகளில் இருந்து விலக்கப்பட்ட விசுவாசமற்ற புறஜாதிகள்.

இந்த மூன்று மடங்கு வேறுபாடு முக்கியமானது, ஏனெனில் இது கிறிஸ்து மகிமையில் திரும்பும் வரை புதிய உடன்படிக்கைக்காக இருக்கிறது. நாம் பார்த்தபடி, அந்த நாள் வரை, காணக்கூடிய சபையுடன் தொடர்புடைய அவிசுவாசிகளுடன் உண்மையான விசுவாசிகள் புதிய உடன்படிக்கையில் சேர்க்கப்படுகிறார்கள். புதிய ஏற்பாட்டு காலத்தில், சுவிசேஷம் அல்லது சபையை ஏற்றுக்கொள்ளாத ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற மூன்றாவது வகையும் உள்ளது. இந்த மக்கள் புதிய உடன்படிக்கையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். பழைய ஏற்பாட்டு வரலாற்றின் போது உடன்படிக்கைக்கு புறம்பானவர்கள் முதன்மையாக புறஜாதிகள். ஆனால் இப்போது கிறிஸ்து வந்துவிட்டதால், கிறிஸ்துவிலும் அவருடைய சபையிலும் எந்த பங்கையும் கொண்டிருக்காத யூதர்களும், புறஜாதிகளும் உடன்படிக்கைக்கு புறம்பானவர்களாக இருக்கிறார்கள்.

மனிதகுலத்தின் சில பிரிவுகள் தேவனின் உடன்படிக்கைகளின் மக்களுடன் எவ்வாறு தொடர்புடையவை என்பதை இப்போது நாம் பார்த்தோம். இந்த குழுக்களுக்கு உடன்படிக்கை இயக்கவியலைப் பயன்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். இந்த வகை மக்கள் எவ்வாறு தேவனின் கருணையை அனுபவித்திருக்கிறார்கள், மனித நம்பகதன்மையின் அவசியம் மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகள் என்ன?

## இயக்கவியலின் பயன்பாடு

ஆதாம் மற்றும் நோவாவில் உள்ள உலகளாவிய உடன்படிக்கைகளின் இயக்கவியலை எல்லா மக்களும் அனுபவித்திருக்கிறார்கள். ஆதாமில் நிறுவப்பட்ட அடிப்படைக் கொள்கைகளாலும் நோவாவில் நிறுவப்பட்ட இயற்கையின் ஸ்திரத்தன்மையாலும் அனைத்து மக்களின் வாழ்க்கையும் நேரடியாக விளைவுகளை சந்தித்துள்ளது. ஆயினும், ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோருடன் தேவன் ஏற்படுத்திய இஸ்ரவேலின் தேசிய உடன்படிக்கைகளுக்கும் இது பொருந்தாது. புது உடன்படிக்கைக்கும் இது பொருந்தாது.

பல்வேறு குழுக்களுக்கு உடன்படிக்கை இயக்கவியலைப் பயன்படுத்துவதை நாம் கருத்தில் கொள்ளும்போது, ராஜ்ய உடன்படிக்கைகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றும் புதிய உடன்படிக்கை மூன்று வகையான மக்களுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதைப் பார்க்க வேண்டும்: முதலில் அவிசுவாசிகள் இந்த உடன்படிக்கைகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்; இரண்டாவதாக, இந்த உடன்படிக்கைகளில் அவிசுவாசிகள் சேர்க்கப்பட்டார்கள்; மூன்றாவதாக, இந்த உடன்படிக்கைகளில் உண்மையான விசுவாசிகள் சேர்க்கப்பட்டார்கள். இஸ்ரவேலின் தேசிய உடன்படிக்கைகளிலிருந்தும் புதிய உடன்படிக்கைகளிலிருந்தும் விலக்கப்பட்ட அவிசுவாசிகளைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## அவிசுவாசிகள் விலக்கப்படுதல்

ராஜ்ய உடன்படிக்கைகள் மற்றும் புதிய உடன்படிக்கைக்கு எந்த தொடர்பும் இல்லாத அவிசுவாசிகள் ஆதாம் மற்றும் நோவாவின் உலகளாவிய உடன்படிக்கைகளால் தேவனுக்குக் கட்டுப்பட்டுள்ளனர். இந்த காரணத்திற்காக, அவர்கள் இன்னும் இந்த உடன்படிக்கைகளின் இயக்கவியலை அனுபவிக்கிறார்கள். தேவன் எல்லா மக்களுக்கும் கருணை காட்டுவதால் அவர்கள் தேவனின் இரக்கத்தைப் பெறுகிறார்கள். மத்தேயு 5:45 இல் இயேசு கூறியது போல்:

> பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா... தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார் (மத்தேயு 5:45).

இந்த ஆசீர்வாதங்களை நாம் அடிக்கடி ”பொது கிருபை” என்று அழைக்கிறோம், ஏனெனில் அவை இரட்சிக்கும் இரக்கங்கள் கிடையாது. மாறாக, அவை எல்லா மனிதர்களுக்குமான தேவனின் கிருபையாகும்.

இதற்கு அப்பால், இஸ்ரவேலின் தேசிய உடன்படிக்கைகள் மற்றும் புதிய உடன்படிக்கைக்கு புறம்பே உள்ள அவிசுவாசிகள், அவர்கள் பெற்ற வெளிப்பாட்டின் அளவின்படி தேவனுக்கு நம்பகமான சேவையை வழங்க வேண்டும். இஸ்ரவேலுக்கும் சபைக்கும் கொடுக்கப்பட்ட விசேஷ வெளிப்பாட்டைப் பற்றிய சில விழிப்புணர்வு அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒருபோதும் இஸ்ரவேல் அல்லது கிறிஸ்துவின் சபையுடனும் தொடர்பு கொள்ளாவிட்டாலும், பொதுவான அல்லது இயற்கையான வெளிப்பாட்டின் மூலம் தேவனுக்கு செய்யவேண்டிய தங்கள் கடமைகளைப் பற்றிய அடிப்படை புரிதல் அவர்களுக்கு இன்னும் இருக்கிறது.

> வேதத்தில், தேவன் நமக்குச் சொல்கிறார். மேலும் பவுல் இந்த வாதத்தை ரோமர் 1ல் கொடுக்கிறார் - அது யார் அல்லது எந்த கலாச்சாரம் என்பது முக்கியமல்ல, இதுவரை இருந்த ஒவ்வொரு மனிதனும் தேவன் இருப்பதைப் பற்றி

> அறிந்திருக்கிறார்கள்... தேவன் மனசாட்சியால் இருக்கிறார் என்பதை ஒவ்வொரு மனிதனும் அறிவான் என்று பவுல் கூறினார். மனிதனுக்கு ஒரு காரணம் இருக்கிறது, அவனுக்கு ஒரு மனசாட்சி இருக்கிறது, உலகில் படைக்கப்பட்டவற்றின் மூலம் தேவனின் தெய்வீக இயல்பு தெளிவாகக் காணப்படுகிறது. எனவே, தேவன் இருக்கிறார் என்பது எல்லா மனிதர்களுக்கும் தெரியும்.
>
> – Rev. கிளீட் ஹக்ஸ்

ரோமர் 1:20 இல் பவுல் இவ்வாறு கூறுகிறார்:

> [தேவனின்] காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை (ரோமர் 1:20).

பொது வெளிப்பாடு எப்போதும் இஸ்ரவேலுடனான உடன்படிக்கைகள் மற்றும் புதிய உடன்படிக்கைக்கு வெளியே அவிசுவாசிகள் தங்கள் சிருஷ்டிகரை ஏற்றுக்கொண்டு சேவை செய்ய கடமைப்பட்டிருக்கிறது.

இதன் விளைவாக, இந்த அவிசுவாசிகளும் தேவன் பொருத்தமாக பார்க்கிறவைகளால் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளை அனுபவிக்கிறார்கள். இஸ்ரவேல் அல்லது கிறிஸ்தவ சபையுடன் ஒருபோதும் சேராத அவிசுவாசிகளுக்கு தேவன் அடிக்கடி தற்காலிக ஆசீர்வாதங்களை வழங்குகிறார். மேலும் அவர் தீர்மானித்தபடி அவர்கள் மீது தற்காலிக சாபங்களையும் கொட்டுகிறார். ஆனால் மகா நியாயத்தீர்ப்பில், இந்த வாழ்க்கையில் தேவனின் தற்காலிக ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள் இந்த அவிசுவாசிகளுக்கு தேவனின் நித்திய சாபங்களுக்கு வழிவகுக்கும் என்று வேதம் தெளிவாக சொல்லுகிறது.

இந்த உடன்படிக்கைகளிலிருந்து விலக்கப்பட்ட அவிசுவாசிகளைப் போலல்லாமல், இஸ்ரவேலுடன் செய்யப்பட்ட தேவனின் உடன்படிக்கைகள் மற்றும் புதிய உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள அவிசுவாசிகளுடன் உடன்படிக்கை இயக்கவியலின் பயன்பாடு வித்தியாசமாக நடைபெறுகிறது.

## அவிசுவாசிகள் உட்படுத்தப்படுதல்

ஆரம்பத்தில், தேவன் இந்த மக்களுக்கு அதிக கருணை காட்டியுள்ளார். அவர்கள் நித்திய இரட்சிப்பைப் பெறவில்லை என்பது உண்மை, ஆனால் இன்னும், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் தேவனின் உடன்படிக்கைக்கு

உட்பட்ட மக்களுடன் இணைந்திருக்கும் அவிசுவாசிகளுக்கு தேவன் மிகுந்த இரக்கம் காட்டியுள்ளார். ரோமர் 9:4 இல், இஸ்ரவேலிலுள்ள அவிசுவாசிகள் கூட அனுபவித்த நன்மைகளைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் பிரதிபலித்தார். அங்கே அவர் இவ்வாறு எழுதினார்:

> புத்திரசுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே (ரோமர் 9:4).

இந்த உடன்படிக்கைகளுக்கு புறம்பானவர்களைக் காட்டிலும், இஸ்ரவேலுடன் தேவன் செய்த உடன்படிக்கைகளுக்குட்பட்ட அவிசுவாசிகளுக்கு தேவன் அதிக தயவைக் காட்டினார். கிறிஸ்தவ சபையுடன் தொடர்புடைய அவிசுவாசிகளுக்கும் இதுவே உண்மை.

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலில் உள்ள விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் இருவரும் எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து உடல் ரீதியாக விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் சீனாய் மலையில் தேவனின் நியாயப்பிரமாணத்தை பரிசாக பெற்றனர். அவர்கள் அனைவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியைப் கைப்பற்றினார்கள். தாவீது மற்றும் சாலொமோன் ஆட்சி செய்த போது அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். அதே வழியில், புதிய ஏற்பாட்டு சபையில் உள்ள அவிசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரத்துடன் இணைந்திருப்பதன் மூலம் பரிசுத்தப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் வார்த்தையின் பிரசங்கத்தைக் கேட்கிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியின் கிரியைகளில் பங்கு கொள்கிறார்கள். இந்த வழியிலும் இன்னும் பல வழிகளிலும், பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் மற்றும் புதிய ஏற்பாட்டு சபையில் உள்ள அவிசுவாசிகளுக்கு தேவன் பெரும் கருணை காட்டியுள்ளார்.

இஸ்ரவேலின் தேசிய உடன்படிக்கைகளிலும் புதிய உடன்படிக்கையிலும் அவிசுவாசிகள் தேவனிடமிருந்து பெரும் கருணையைப் பெறுவதோடு, தேவனுக்கு உண்மையுள்ள சேவை செய்வதற்குக் கடன்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய சித்தத்தைப் பற்றிய அதிக அறிவைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, கீழ்ப்படிதலின் உயர்ந்த தராதரங்களுக்குதேவன் அவர்களை வைத்திருக்கிறார். லூக்கா 12:48ல் இயேசு இவ்வாறு கூறினார்:

> எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்
> (லூக்கா 12:48).

தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைக் கற்றுக்கொள்பவர்களும், அவருடைய வழிகளை அறிந்தவர்களும், அவர்கள் பெற்றதற்குக் கணக்குக் கொடுக்ககவேண்டும்.

இஸ்ரவேலின் தேசிய உடன்படிக்கைகளிலும் புதிய உடன்படிக்கையிலும் அவிசுவாசிகள் தேவனின் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விளைவுகளை அனுபவிக்கிறார்கள் என்பதையும் வேதம் சுட்டிக்காட்டுகிறது. தேவன் தீர்மானித்தபடி, அவர்கள் இந்த வாழ்க்கையில் வெவ்வேறு வகையான தற்காலிக ஆசீர்வாதங்களையும் தற்காலிக சாபங்களையும் பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்துவில் இரட்சிப்பிற்கான விசுவாசத்தை அடையவில்லை என்றால், நியாயத்தீர்ப்பின் மகா நாளில் இந்த ஆசீர்வாதங்களும் சாபங்களும் தேவனின் நித்திய சாபங்களுக்கு மட்டுமே வழிவகுக்கும். அவர்கள் என்றென்றும் தேவனின் நியாயத்தீர்ப்பின் கீழ் இருப்பார்கள். எபிரெயர் 10:28-29 இல், எபிரெயரின் எழுத்தாளர் புதிய உடன்படிக்கையில் அவிசுவாசிகளுக்கு எதிராக நித்திய நியாயத்தீர்ப்பைப் பற்றி எழுதினார்:

> மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே… தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள் (எபிரெயர் 10:28-29).

இந்த மக்கள் ”உடன்படிக்கையின் இரத்தத்தால்” ”பரிசுத்தப்படுத்தப்படுகிறார்கள்” என்பதை இங்கே கவனியுங்கள். அவர்கள் நித்திய இரட்சிப்பைப் பெற்றனர் என்று இது கூறவில்லை. மாறாக, அவர்கள் புதிய உடன்படிக்கையில் பங்கெடுப்பதால் உலகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். இந்த மக்கள் தேவனுக்கு எதிராக எப்பொழுதும் செய்து வந்ததுபோல கலகம் செய்யும்போது, அவருடைய எதிரிகளுக்கு ஒதுக்கப்பட்ட தீர்ப்பாகிய நியாயதீர்ப்பே எதிர்பார்க்ககூடிய ஒன்றாகும்.

இஸ்ரவேலின் தேசியய உடன்படிக்கைகள் மற்றும் புதிய உடன்படிக்கையில் அவிசுவாசிகள் விலக்கப்பட்டதையும் சேர்க்கப்பட்டதையும் நாம் பார்த்தோம். இப்போது, இந்த உடன்படிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள உண்மையான விசுவாசிகள் தேவனுடன் இருக்கும் தொடர்புகளின் இயக்கவியலை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

## விசுவாசிகள் சேர்க்கப்படுதல்

பாவங்களை மன்னித்தல், தேவனோடுள்ள நித்திய ஐக்கியம் உட்பட, உண்மையான விசுவாசிகளுக்குக் காட்டப்படும் தெய்வீக இரக்கம் அளவிட முடியாதது. ரோமர் 8:1-2 இல் பவுல் இவ்வாறு எழுதினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே (ரோமர் 8:1-2).

> நம்முடைய பாவங்களுக்கான தண்டனையைச் செலுத்துவதற்கும், நம்முடைய இடத்தில் துன்பப்படுவதற்கும், நம்மீது நாம் கொண்டுவந்த ஆக்கினைதீர்ப்பிலிருந்து நம்மை இரட்சிப்பதற்கும் அவர் தம்முடைய குமாரனை அனுப்பும் அளவுக்கு தேவன் நம்மை நேசிக்கிறார். எனவே, இது நமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தர வேண்டும். உண்மையில், பவுல் ரோமர் 8ல் இந்தக் கருத்தை எடுத்துரைத்து, இந்த வார்த்தைகளால் நம்மை ஊக்குவிக்கிறார்: "தேவன் தம்முடைய சொந்த குமாரனைக் காப்பாற்றாமல், நம் அனைவருக்காகவும் அவரைக் கொடுத்தார் என்றால், அவரோடு கூட அவர் நமக்கு எல்லாரையும் இலவசமாகக் கொடுக்காமல் இருப்பது எப்படி?" எனவே, தேவன் தம்முடைய குமாரனைக் கொடுப்பதில் அவர் நம்மை நேசிக்கும் விதத்தை திட்டவட்டமாகவும் இறுதியாகவும் உச்சக்கட்டமாகவும் நமக்குக் காட்டியுள்ளார். எனவே நாம் அவரை விசுவாசிக்க வேண்டும் மற்றும் அவர் நம்மை உண்மையிலேயே நேசிக்கிறார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
>
> – Dr. பிராண்டன் டி. க்ரோவ்

அதே சமயம், தேவனுடைய நியாயத்தீர்ப்பின் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து நாம் விடுபடும்போது, கிறிஸ்துவில் தேவன் நமக்காகச் செய்ததற்கு நன்றியுணர்வுடன் தேவனுக்கு உண்மையுள்ள சேவை செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இதனால்தான், ரோமர் 8:7ல், பவுல் விசுவாசிகளை அவிசுவாசிகளுடன் ஒப்பிடுகையில், இந்த வார்த்தைகளைக் கூறினார்:

> மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது (ரோமர் 8:7).

மாறாக, தேவனை நேசிக்கும் மனம் அவருடைய பிரமாணத்திற்கு அடிபணிகிறது. எனவே, ரோமர் 8:12-13ல், பவுல் இந்த வார்த்தைகளைச் சேர்த்தார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆகையால் சகோதரரே, நாம் … சரீரத்தின் கிரியைகளைக் அழிப்போம் (ரோமர் 8:12-13).

விசுவாசிகளுக்கு அவிசுவாசிகளிடமிருந்து வித்தியாசமாக வாழ வேண்டிய கடமை உள்ளது. அதாவது, இரட்சிப்பைப் பெறுவதற்காக மட்டும் அல்ல, தேவனின் நியாயப்பிரமாணத்திற்க்கு அடிபணிய வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது. ஆனால், தேவனின் கிருபையால் அவர் கொடுத்த இரட்சிப்புக்காக அவரை கனப்படுத்த வேண்டும்.

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்களைப் போலவே, கிறிஸ்தவர்களும் தங்கள் நம்பிக்கையை சோதித்து நிரூபிக்க வேதாகமத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பழைய ஏற்பாட்டில் உள்ள உண்மையான விசுவாசிகள் தங்கள் விசுவாசத்திற்கு வரும் சோதனையாக மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய அழைக்கப்பட்டனர். புதிய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்தவர்கள் அதே வகையான சோதனைக்கு அழைக்கப்படுகிறார்கள். 2 கொரிந்தியர் 13:5ல் பவுல் கொரிந்தியர்களிடம் இவ்வாறு கூறினார்:

> நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்! (2 கொரிந்தியர் 13:5).

கிறிஸ்து தேவனின் பரிபூரண கீழ்ப்படிதலுள்ள குமாரனாக இருந்தார், அவருடைய நீதி நமக்கு கொடுக்கப்பட்டது, அதனால் நமது நித்திய இரட்சிப்பு பாதுகாப்பானது. ஆனால் நாம் நமது அன்றாட வாழ்க்கையை வாழும்போது, தேவன் நமக்கு அளித்த இரட்சிப்பை நிரூபிக்க வேண்டும். பவுல் பிலிப்பியர் 2:12 இல் இவ்வாறு ஊக்குவிக்கிறார்:

> அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலிப்பியர் 2:12).

நாம் எதிர்பார்ப்பது போல், இஸ்ரவேலின் தேசிய உடன்படிக்கைகளிலும் புதிய உடன்படிக்கையிலும் உண்மையான விசுவாசிகள் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகளை பல்வேறு வழிகளில் அனுபவிக்கிறார்கள். ஒருபுறம், தேவன் தனது ஞானத்தில் தீர்மானிக்கிறார், உண்மையான விசுவாசிகள் தற்காலிக ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறார்கள். தேவனின் ஆவியின் பல ஆசீர்வாதங்கள் நமக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கும் அப்பால், தேவன் தனது மக்களுக்கு சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களைக் கூட அடிக்கடி வழங்குகிறார். ஆனால் அதற்கு நேர்மாறானது உண்மையாக இருக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அதாவது, தேவன் தம்முடைய உண்மையான பிள்ளைகளை ஒழுக்கத்தின் மூலம் பயிற்றுவிக்கிறார். எபிரெயர் 12:6 இல், எழுத்தாளர் பழைய ஏற்பாட்டை இவ்வாறு விளக்கும்போது அதைக் குறிப்பிட்டார்:

> கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் (எபிரெயர் 12:6).

இந்த வாழ்க்கையில் உண்மையான விசுவாசிகளுக்கு தற்காலிக ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் கலவையான அனுபவங்கள் இருந்தபோதிலும், அவிசுவாசிகளுக்கும் விசுவாசிகளுக்கும் இடையே ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது. கிறிஸ்து மகிமையில் திரும்பும்போது, உண்மையான விசுவாசிகள் தேவனின் நித்திய ஆசீர்வாதங்களை மட்டுமே அனுபவிப்பார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 21:7 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான் (வெளிப்படுத்தின விசேஷம் 21:7).

பழைய ஏற்பாட்டை நாம் தொடர்ந்து படிக்கும்போது, மனிதகுலத்தின் இந்த மூன்று பிரிவுகளையும், உடன்படிக்கை இயக்கவியல் அவற்றிற்கு எவ்வாறு பொருந்தும் என்பதையும் நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டியது அவசியம். ராஜ்ய உடன்படிக்கைகளுக்கு புறம்பே இருக்கும் அவிசுவாசிகளுக்கும் புதிய உடன்படிக்கைக்கும், இந்த உடன்படிக்கைகளுக்குள் உள்ள அவிசுவாசிகளுக்கும், இந்த உடன்படிக்கைகளுக்குள் இருக்கும் உண்மையான விசுவாசிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நினைவில் கொள்வது, பண்டைய இஸ்ரவேலர்கள் மீது பழைய ஏற்பாடு ஏற்படுத்தின தாக்கங்களைப் புரிந்துகொள்ள நம்மை தயார்படுத்தும். அதை படிக்கவும், அது இன்று நமக்கு எவ்வாறு பொருந்தும் என்பதைப் பார்ப்பதற்கும் நாம் விசேஷித்த வகையில் தயாராக இருப்போம்.

# முடிவுரை

இந்த பாடத்தில், தெய்வீக உடன்படிக்கைகள் பற்றிய வேதாகமக் கருத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். உடன்படிக்கைகள் மூலம் தேவன் தம்முடைய ராஜ்யத்தை நிர்வகிக்கிறார் என்பதை நாம் பார்த்தோம். ஆதாம், நோவா,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாம், மோசே, தாவீது மற்றும் புதிய உடன்படிக்கையில் தேவனின் உடன்படிக்கைகள் வெவ்வேறு காலகட்டங்களில் தேவனுடைய ராஜ்யத்தின் கொள்கைகளை வலியுறுத்தின என்பதையும் நாம் வேதாகம வரலாற்றையும் பார்த்தோம். கூடுதலாக, ஒவ்வொரு உடன்படிக்கை காலத்திலும் தேவனுக்கும் அவருடைய உடன்படிக்கை மக்களுக்கும் இடையேயான தொடர்புகளை வகைப்படுத்தும் தெய்வீக கருணை, மனித விசுவாசம் மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படை இயக்கவியலை நாம் ஆராய்ந்தோம். இறுதியாக, இந்த இயக்கவியல் வேதாகமத்திலும் இன்றும் எவ்வாறு பல்வேறு வகையான மக்களுக்கு பொருந்துகிறதாய் இருக்கிறது என்பதை ஆராய்ந்தோம்.

பழைய ஏற்பாட்டைப் புரிந்துகொள்வதற்கான தெய்வீக உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துவது கடினம். ஒவ்வொரு வேதாகம ஆசிரியரும் தேவன் தனது ராஜ்யத்தை உடன்படிக்கைகள் மூலம் நிர்வகித்தார் என்பதை அறிந்திருந்தார்கள். இதன் விளைவாக, பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள ஒவ்வொரு போதனையின் முக்கியத்துவமும் தேவனின் உடன்படிக்கைகளின் கட்டமைப்பில் வேரூன்றியுள்ளது. புதிய உடன்படிக்கையைக் கொண்டு வந்த கிறிஸ்துவுக்கு நாம் ஊழியம் செய்கிறோம். அவரைப் பின்பற்றுபவர்களாகிய நாம், நம்மால் முடிந்த அனைத்தையும் பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனின் உடன்படிக்கைகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால் இந்த யுகத்தில் நாம் அவருக்காக வாழ முடியும். வேதாகமத்தில் உள்ள தெய்வீக உடன்படிக்கைகளின் கொள்கைகளை கைகொள்வதற்கான நமது அர்ப்பணிப்புகளை புதுப்பிப்பது, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் முழுமையில் அவருடன் நித்திய ஜீவனுக்கு நேராக நம்மை வழிநடத்தும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.